Regd. No. 2975.

ஸ்ரீ:

# SRI RAMANUJAN


*Editor*: P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM-3.

# ஸ்ரீ ராமாநுஜன் 243

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 6 ஜீவியச் சந்தா ரூ. 116.

பேருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1969 மார்ச்மீ கீலகஸு பங்குனிமீ

# ஸ்ரீ ராமாநுஜன் — 243

சென்னை ஸத்ஸம்ப்ரதாய ப்ரகாசனஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 21 | கீலக வருஷ பங்குனி மீ 1969 மார்ச்சு வெளியீடு. | ஸஞ்சிகை 3 |
|---|---|---|


## நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி.

### 14. திருக்குடந்தை—கும்பகோணம்.

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ—வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருமகுடந் தைக்கிடந்தாய் பேசு.

| | | | |
|---|---|---|---|
| சிறு குறள் ஆய் | வாமநாவதாரமெடுத்து (பின்பு) | தானே அளித்து | நீயே பாதுகாத்து |
| வானில் திருமகுடம் தைக்க | ஆகாயத்தில் அழகிய முடி முட்டும்படி | தானே அழிக்கும் தளர்ச்சியோ | நீயே யழிப்பதனாலாகிய இளைப்பினாலோ |
| நீண்ட பெரும | ஓங்கி வளர்ந்த பெருமானே! | குடந்தை கிடந்தாய் | திருக்குடந்தையிலே (நீண்ட காலமாகச்) சயனித்திராநின்றாய்? |
| உலகை | ஸகல சராசரங்களையும் | பேசு | உண்மைக் காரணத்தை உரைத்தருள வேணும். |
| நீ தானே படைத்து | நீயே ஸ்ருஷ்டித்து | | |

* * *—“நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞால மேனமாய் இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம் கடந்தகால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள் கிடந்தவாறு—பேசு” என்ற திருச்சந்தவிருத்தப் பாசுரத்தின்சாயல் இங்குக் காணத்தகும். அவ்வாழ்வார் *எழுந்திருந்து பேசு* என்றார்; இவர் பேசு என்றவளவோடு நின்றார். ...

# ஜிஜ்ஞாஸுவுக்கு விஜ்ஞாபனம்.

அடியேனுடைய ஆப்தர்களிலொருவர் 'ஒரு ஸந்தேஹ விஜ்ஞாபனம்' என்று மகுடமிட்டு ஒரு கடிதம் விடுத்திருந்தார். அந்த ஸந்தேஹத்தை முன்னம் விளக்கி அதன் பரிஹாரத்தை யதாமதி விஜ்ஞாபிக்கிறேன். பிள்ளைப் பெருமாளையங்காருடைய அஷ்டப் பிரபந்தத்தில் ஒன்றான திருவரங்கத்து மாலை யென்னும் பிரபந்தத்தில் நாற்பத்தொன்பதாவது செய்யுள் முதல் இருபத்தைந்து செய்யுட்களினால் ஸ்ரீகிருஷ்ணாவதார லீலைகள் அற்புதமாக அநுபவிக்கப்பட்டுள்ளன. அதில் ஐம்பத்தோராவது செய்யுளின் பின்னடிகள்—

"(பால்) குடிக்குங் களவுக்கு மாறுகொண்டே யொருகோபிபற்றி
அடிக்கும்பொழுதிற் பதினாலுலகு மடிபட்டவே"

என்பன. திருவாய்ப்பாடியில் கண்ணபிரான் நெய் பால் தயிர் முதலியன களவு கண்டு அமுது செய்யக்கண்ட ஒரு கோபி அவனை மத்தாலடித்தபொழுது அவன்றன் திருவுதரத்திலுள்ள சராசரங்கள் யாவும் அடிபட்டனவென்று இங்குக் கூறப்பட்டுள்ளது. இக்கதை எந்த புராணத்திலாவது கூறப்பட்டுள்ளதா? என்று ஆப்தருடைய கேள்வி. இதற்கு ஸ்ரீ ராமாநுஜன் மூலமாகவே ஸமாதானம் வெளிவருவது நலம் என்று அப்பெரியார் தெரிவித்திருப்பதால் இங்கு விஜ்ஞாபிக்கலாகிறது.


### ஸமாதானம்

நாம் இதிஹாஸ புராணங்களையெல்லாம் கண்டறிந்தவர்களல்லோம். கண்ட சிலவற்றிலுங்கூட மறப்பு மிகவுடையோம். ஆகவே இதற்குப் புராணாதாரமிருப்பதாக நம்முடைய புத்திக்கு எட்டவில்லை. இக்கதை ஒரு புராணத்திலிருக்க வேணுமென்கிற நிர்ப்பந்தமுமில்லை. ஒரு விசேஷப் பொருளைப் பெறுவிப்பதற்காக இங்ஙனே சமத்காரமாகக் கூறுதல் கவி ஸமயத்திற்குச் சேரும். இதனால் பெறுவிக்கப்படும் விசேஷப் பொருள் யாதெனில்; இங்ஙனம் ஓர் ஆய்ச்சியினால் அடிபட்ட கண்ணன் ஸாமான்யனை இடைப்பயலல்லன்; *அண்டரண்டபகிரண்டத் தொருமாநிலமெழுமால்வரை முற்றுமுண்டவனான பரமபுருஷனே என்று காட்டுதலே விசேஷப் பொருளாம். எம்பெருமானுடைய எளிமைக் குணத்தை [ஸௌலப்யத்தை] அநுபவிக்கும்போது அவனது பரத்துவத்தையுங்கூட்டி யநுபவித்தலும், அவனது பரத்துவத்தை யநுபவிக்கும்போது ஸௌலப்யத்தையுங்கூட்டி யநுபவித்தலும் பரமபக்தர்களின் சுவைமிக்க இயல்பன்றோ.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (10-6.) *எங்கானுமீதொப்பதோர் மாயமுண்டே* என்று தொடங்குந் திருமொழியில் பாசுரந்தோறும் *அவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே* என்கிறவிதனையே ஈற்றடியாக வைத்துப் பாடியுள்ளார். முன்னம் மூன்றடிகளிலும் அவனது அற்புதமான பரத்துவச் செயலை ஒவ்வொன்றாகச் சொல்லி, அத்தகைய பரத்துவம் பொருந்திய பெருமான் காண்மின் இன்று கட்டுண்டு கிடக்கிறான்! என்று சொல்லும்முகத்தால் கண்ணபிரானுடைய பரத்வஸௌலப்யங்களிரண்டையும் ஒருசேர அநுபவிக்கிறபடி.


இங்ஙனே யநுபவித்த திருமங்கையாழ்வார் தாமே மேலே (11-5.) *மானமருமென்னோக்கி யென்று தொடங்கும் பதிகத்தை இருதோழிகளின் ஸம்வாதமாகவைத்து பாட்டுத்தோறும் முன்னடிகளில் ஒருத்தி தாழ்வைச் சொல்லி ஏசுவதாகவும், பின்னடிகளில் மற்றொருத்தி மேன்மையைச் சொல்லி ஏத்துவதாகவும் அமைத்து ஸௌலப்யம் முன்னாகப் பரத்துவத்தை யநுபவித்தபடி காண்கிறோம். இவ்வகையில் "அடிக்கும்பொழுதிற் பதினாலுலகு மடிபட்டவே" என்று ஐயங்கார் கூறினதும் ஸௌலப்யத்தைக் கண்டோக்தியாகவும், பரத்வத்தை வ்யங்க்யமாகவும் வைத்து அநுபவித்தவாறும் என்று கொள்ளக் குறையில்லை. இது பர்யாயோக்தாலங்காரமாகும்.

பிள்ளைப் பெருமாளையங்கார் தம்முடைய பிரபந்தங்களைப் பெரும்பாலும் திவ்யப் பிரபந்தச் சாயையிலேயே பணித்தவரென்பது உணரத்தக்கது. ப்ரஸங்காத் நம்மாழ்வாருடைய அற்புதமானவொரு க்ருஷ்ணாவதாராநுபவத்தையுமிங்குக் காட்டுகின்றேன். திருவிருத்தத்தில் (பா. 21.) *சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி, விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபந்தரா நிற்கவேயங்கு, ஓர் மாயையினால் ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து இமிலேற்று வன் கூன் கோட்டிடையாடினை கூத்து, அடலாயர் தம் கொம்பினுக்கே.* என்கிற பாசுரத்தில் கண்ணபிரானுடைய அற்புதச் செயலொன்று அபூர்வமாக அநுபவிக்கப்பட்டுள்ளது. திருநாட்டிலே நித்யஸூரிகள் பரவாஸுதேவனுக்குத் திருவாராதனம் ஸமர்ப்பிக்கவிருக்கும் நிலையில் ஸ்நானாஸனமும் அலங்காராஸனமும் ஸமர்ப்பித்து [அதாவது, திருமஞ்சனம் ஸமர்ப்பித்துத் திருமாலை சாத்தி] தூபம் ஸமர்ப்பிக்குமளவில் அப்புகையினால் திருமுகமண்டலம் மறையுமே, அந்த அவஸரத்தில் வெண்ணெயமுதை நினைத்துத் திருவாய்ப்பாடியேற எழுந்தருளி வெண்ணெய் விழுங்கினதோடு நில்லாமல் எருதேழடர்த்து நப்பின்னையையும் மணம்புணர்ந்து தூபத்திற்கடுத்த தீபத்திற்குத் திருநாடேறச் சென்றுநின்று முங்காட்டினபடியை இப்பாட்டில் அநுபவித்தாராயிற்று நம்மாழ்வார். இந்த சேஷ்டிதம் எந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளதென்று



கேட்டால் என் சொல்லவல்லோம்? ஆசார்ய ஹ்ருதயத்தில் இது ஆழ்வார் தாமே ஸாக்ஷாத்கரித்த விருத்தாந்தமெனப்படுகிறது. * "முந்நீர்வாழ்ந்தார் சூட்டுங் கோவை யாழியென்கிற ஸாக்ஷாத்க்ருத ஸ்வபரவ்ருத்தாந்தர்க்கு ....." என்னும் சூர்ணையினுல்.

"பதினுலுலகுமடிபட்டவே" என்ற பிள்ளைப் பெருமாளையங்கார்க்கு விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனத்தில் நோக்கு—என்றுங் கொள்ளலாம். எம்பெருமான்



எந்த நிலைமையிலும் சேதநாசேதநவிசிஷ்டனுகவன்றித் தனியேயிரான் என்கிற நூற்கொள்கை நிறுவப்பட்டதாம். ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட தசையும் ஸ்தூலசிதசித்விசிஷ்ட தசையுமாக இரண்டுண்டே வேதாந்திகளுக்கு. ... ... ...

இங்கே ஸேவை ஸாதிக்கும் திருக்கோலம் மதுரகவிகளோடும் நாதமுனிகளோடும் சேர்த்தியான நம்மாழ்வார். இவ்வழகிய சேர்த்தியைப் பெருமாள்கோயில் [ஸ்ரீகாஞ்சி] தேவப்பெருமாள் ஸன்னிதியில் கோயில்கொண்டருளியிருக்கும் ஆழ்வார் ஸன்னிதியில் மட்டும் ஸேவிக்க இயலும். மதுரகவிகள் நம்மாழ்வார்க்கு ஸமகாலத்து சிஷ்யர். ஸ்ரீமந் நாதமுனிகள் ஆழ்வாரை யோகதசையில் ஸாக்ஷாத்கரிக்கப்பெற்று சிஷ்யரானவர். நம்மாழ்வார் அவ்வோ திருப்பதிகளில் பெரும்பாலும் உபதேச முத்திரையோடு ஸேவை ஸாதிப்பது காண்கிறோம். தேவப்பெருமாள் ஸந்நிதித் திருக்கோலத்தில் மட்டும் *துயரறு சுடரடி தொழுதெழென்மனனே* என்ற அனுஸந்தானத்திற்கேற்பத் தம் திருவுள்ளத்தை நோக்கிய ஞான முத்திரையோடு ஸேவை ஸாதிக்குமழகு ஐதிஹ்யகர்ப்பமானது. ... ... ... ...

# புராதன நூற்பதிப்புகள்.

மணவாளமாமுனிகளருளிச்செய்த ஆர்த்திப் பிரபந்தத்தில் அதிகமாக அடியேன் சிந்தை செய்யும் பாசுரங்களில் தலையானது

"பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப் பரிவுடனே பணித்தருளும் பல்கலைகள் தம்மைக்
கண்டதெல்லாமெழுதியவை கற்றிருந்தும் பிறர்க்குக் காதலுடன் கற்பித்துங்காலத்தைக்
கழித்தேன்"

என்பதாம். பண்டைக் காலத்தில் இதிஹாஸ புராணங்களோ ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளோ எதுவும் ஓலையேடுகளில்தானே காணலாயிருந்தது. அதுவும் ஒருரில் ஒன்றிரண்டு ஸ்ரீகோசங்களே காணக் கிடைக்குமாம். காசு கொடுத்து எழுதுவித்துக் கொள்ளுவர்களாம் விருப்பமுடையவர்கள். மணவாளமாமுனிகள் தமது திருக்கையினால் தாமே ஏடுபடுத்திக் கொண்டதாக அருளிச்செய்கிறார். அக்காலத்தையும் இக்காலத்தையும் நினைத்துப் பார்க்கும்போது நாம் பரம பாக்யசாலிகளென்னவேணும். ஒரு புத்தகம் எத்தனை லிபிகளில் எத்தனை விதமான பதிப்புகளேறியிருக்கிறதென்பதையும், விஷய ஸூசியும், ப்ரமாணாநுக்ரமணிகையும் முதலானவை எவ்வளவு ஒழுங்காக அமைந்திருக்கின்றனவென்பதையும் உன்னும்போது ஒருபுறம் நமக்கு ஸந்தோஷமுண்டானாலும், ஆவச்யகதையுள்ளபோது பார்த்துக் கொள்வோமென்று உபேக்ஷையாக இருந்துவிடுவதன்றி ஸ்ரீகோசங்களை ஆநுபூர்வியாக ஸேவித்து மனத்தில் தேக்கிக்கொள்ளும் பாக்கியமுடையோமல்லோமே! என்கிற ஸங்கடமே மிகவுடையோமாயிரா



நின்றோம். பண்டைக் காலத்துப் பெரியார்களுக்கிருந்த தாரண சக்தியில் ஏகதேசமுமுடையோமல்லோம். ஆயினும், நம்மிடத்தில் எல்லா ஸ்ரீகோசங்களுமிருக்கவேணுமென்கிற ருசியில் குறையற்றிருக்கின்றோமென்பது ஒரு பெருமகிழ்ச்சியே.

காசியில் சௌகம்பா பதிப்பகம், பாம்பே மகாநகரத்தில் கேமராஜ பதிப்பகம், நிர்ணயஸாகர பதிப்பகம், பூனாவில் ஆனந்தாச்ரமப் பதிப்பகம், கோரக் பூரில் கீதா பதிப்பகம்......என்றிப்படி பலபல பதிப்பகங்கள் வட இந்தியாவில் தோன்றிப் பல

வகைப்பட்ட க்ரந்தங்களின் முத்ரணமாகிற மஹோபகாரம் விளைந்திருப்பதும் விளைந்து கொண்டிருப்பதும் ஆலோசிக்கப்படுமிடத்து, மஹர்ஷிகளினுடையவும் மஹாசார்யர் களினுடையவும் மஹாகவிகளினுடையவும் பரிச்ரமங்களெல்லாம் இப்போதுதான் ஸபலமாயினவென்று அறுதியிடத் தட்டுண்டோ? அதெல்லாங்கிடக்க, நம்முடைய பூர்வாசார்ய திவ்ய ஸூக்திகளின் ரக்ஷணத்தைப்பற்றி இங்கு முக்கியமாக விஜ்ஞாபிக்க விரும்புகிறேன்.

நம்முடைய உபயவேதாந்த ஸம்ப்ரதாயக்ரந்தங்களை நம்முடைய பெரியோர்கள் அச்சிடத் தொடங்கி ஏற்றத்தாழ்வில்லாமல் ஸரியாக ஒரு நூறாண்டு ஆயிருக்கின்றது. முதலில் சிறுசிறு க்ரந்தங்கள் சில அச்சிடப்பட்டிருக்கும்: பெரிய பகவத் விஷயப்பதிப்பு என்றும் செங்கல்வராயப்பதிப்பு என்றும் வழங்கப்படுவதொரு பதிப்புண்டே, இதுதான் ப்ரதம பரிகணநீயமும் ஈடு எடுப்புமில்லாததுமான ஸம்ப்ரதாயக்ரந்த முத்ரணம். இது தெலுங்கு லிபியில் அமைந்திருப்பதனால் இதன் அருமை பெருமைகள் தெலுங்கு லிபியறியாதார்க்குத் தெரியாதென்று நினைக்க இடமுண்டு. ஆனாலும் அந்த ஸ்ரீகோசத்தைப் பாராத ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரும்பாலும் இருக்கமாட்டார்கள். ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு ஸம்புடமாக அந்த ஸ்ரீகோசத்தை இன்னமும் ஸகல திவ்ய தேசங்களிலும் பல பெரியார்களின் திருமாளிகைகளில் ஸேவிக்கப் பெறுகிறோம். அந்த பத்து ஸம்புடங்களையும் கையில் கொள்ளும்போது எம்பெருமானுடைய தசாவதாரங்களும் நம்முடைய கைப்பட்டனவாக நினைத்து ஆனந்திக்க வேண்டியதாகிறது.

ஆசார்ய ஹ்ருதயத்தில் "சாதுசனம் நண்ணா மயர்வற மாசறுக்கும்" என்று தொடங்கி "வாச்யன் பத்தினுடைய தோற்றம்போலே பத்துப் பத்தானவிதின் ஆவிர்ப்பாவம்" என்று தலைக்கட்டும் சூர்ணையில் திருவாய்மொழியாயிரத்தின் பத்து சதகமான நிலைமையை எம்பெருமானுடைய பத்து அவதாரங்களாகப் பேசியிருப்பதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காணுமாபோலே யிராநின்றது அந்த பெரிய பகவத் விஷயத்தின் பத்து ஸம்புடமான ஸந்நிவேசம். அந்தப் பதிப்பில் எத்தனை க்ரந்தங்கள் அடங்கியிருக்கின்றன தெரியுமோ? பதினாறு க்ரந்தங்களடங்கியிருக்கின்றன. அவற்றைப் பரிசோதித்த பெரியார்கள் நம்மைப் போன்ற மனிதர்களே. ஆனாலும் அவர்களை அடியேன் எங்ஙனம் நினைத்திருக்கிறேனென்றால், இந்த முத்ரண கைங்கர்யத்திற்காகவே நித்ய விபூதியிலிருந்து லீலாவிபூதிக் கெழுந்தருளின ஸூரிகள் என்றே அறுதியிட்டிருக்கிறேன். அந்த வித்வத்வரேண்ய ஸ்வாமிகளை அடியோங்களை ப [illegible] ஸ்ரீமத் பரமஹம்ஸ அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியும், ஜகத்ப்ரஸித்த வித்வத்ஸார்வபௌமரான ஸ்ரீ[illegible] ஸ்வாமியும் நேரில் ஸேவித்துப் [illegible]வர்களென்றும் கேள்வியுண்டு. இப்போது நடைபெறும் வருடம் 1969. மேலே ப்ரஸ்தாவித்த பகவத் விஷய முத்ரணம் முயன்றது 1868ல். 1871-ஆம் ஆண்டில் முதற்பத்தையச்சிட்டு வெளியிட்டு விட்டார்கள். பின் ஆறு வருஷ அவகாசத்திற்குள் முத்ரணத்தைப் பூர்த்திசெய்து விட்டார்கள். அந்த ஸ்ரீகோசத்தை ஸேவித்தால் ஒரே நாளில் அச்சிடுவித்தது போலன்றோ தோன்றநின்றது. ஏறக்குறைய லக்ஷம் பக்கமுள்ள அந்த ஸ்ரீகோசத்தில் ஒரு பிழைகூட எடுத்துக்காட்ட முடியாத அதிசயம் அதிசயங்களுக்குள் தலையானதன்றோ.

அதில் மற்றொரு அரிய பெரிய விசேஷமுங் கேளீர்; ஈடுமுப்பத்தாறாயிரப்படியில் மூவாயிரப்பாசுரங்கள் பலபல உதாஹரிக்கப்படுகின்றனவன்றே; அவற்றின் வியாக்கியானங்களும் பூர்த்தியாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன ஆங்காங்கு. பரிசோதகர்களான அந்த வித்வான்கள் தம்தம் திருமாளிகைகளிலிருந்துகொண்டு, அச்சுத்தாள்களைத் திருத்தும் பணியோடுமட்டும் நில்லாமல் அச்செழுத்துக் கோப்பது முதலானவற்றிலும் பரிபூர்ணமான பயிற்சி செய்து அச்சுக்கூடப் பணியாளர்களாகவும் இருந்து வந்தார்களென்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அதுவொரு அதிமாநுஷக்ருத்யமென்றல்லது வேறொன்றும் சொல்லப்போகாது.

ஆக, மேலே விவரித்த பகவத் விஷயப் பதிப்புக்குப்பிறகு நம்முடைய ஸம்பிரதாய க்ரந்தப் பதிப்புகள் சென்னையில் த்ரைவர்ணிக குலதிலகராய் வாழ்ந்த ஸ்ரீமான் கராலபாடி ஆழ்வாரய்யா என்பவரால் வெகு தீவிரமாகத் தொடங்கப்பட்டன. அவருடைய பரிசயம் எனக்கு இளமையில் மிக நன்றாகவுண்டானபடியால் அவருடைய பணிகளை ஆரம்ப தசையிலிருந்தே அறிவேன். ஒரே தடவை இருபது ரூபா மட்டும் சந்தா செலுத்துபவர்களுக்கு மூன்று தலைமுறைக்குப் புஸ்தகங்கள் கொடுப்பதாக பிரதிஜ்ஞை செய்து ஏறக்குறைய லக்ஷம் ரூபா வரையில் திரட்டி நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலவற்றைப்பற் தகுந்த பண்டிதர்களை நியமித்து வெளியிட்டு வந்தார். தமிழ் தெலுங்கு க்ரந்தம் ஆகிய மூன்று லிபிகளிலும் உயர்ந்த க்ரந்தங்களை வெளியிட்டு வந்தார். ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபக ஸபையென்று அவர்தாம் ஏற்படுத்தினர். அந்த ஸபையின் மூலமாகவே நாலாயிர வியாக்கியானங்களும் வெளிவந்தன. பல வியாக்கியானங்கள் தனித்தனி தமிழ் லிபியிலும் தெலுங்கு லிபியிலும் வெளிவந்தன. திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்கள்மட்டுமன்றிக்கே மற்றும் அபூர்வ க்ரந்தங்கள் பலபல வெளிவந்தன. தற்காலத்தில் ஆங்காங்கு நம்மவர்கள் அநுபவிக்கின்ற ஸம்பிரதாய க்ரந்தங்கள் பெரும்பாலும் அவருடைய பதிப்பேயென்னலாம்.

அவர் உயர்ந்த வித்வான், சிறந்த தனிகர். ச்ரத்தையோ எல்லை கடந்தது. அந்த ஸபை இற்றைக்கும் தொடர்ச்சியாக நடந்து வருமாறு அவருடைய ஏற்பாடு இருந்தது. கண்ணெச்சில் பட்டு விட்டது. வேலியே பயிரை மேய்ந்ததென்னுங் கதையாகி நிதி முழுதும் தீயாயொழிந்தது. இது 35, 40 ஆண்டுகட்டு முற்பட்ட கதை.

அதே காலத்தில் கீர்த்தி மூர்த்திகளான ஸ்ரீமதுபயவே. யோகி. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி, (அஸ்மதாசார்யரான) ஸ்ரீமத் ப்ரதிவாதி பயங்கரம் காதி ஸ்வாமி, (திருவல்லிக்கேணி) சே. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி. (ஆனந்தா பிரெஸ் தலைவர்) ராவ்பஹதூர். வேலூர் ரங்கநாதன் செட்டியார் ஆக இப்பெரியார்கள் தனித்தனியே ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரகடனங்களில் ப்ரவர்த்தித்து மஹோபகாரம் செய்தார்கள். ஸ்ரீ யோகிஸ்வாமி தெலுங்கு லிபியில் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஸ்ரீவசநபூஷணமீமாம்ஸா பாஷ்யம் அரும்பதவுரைகளோடு கூடின ஸ்ரீவசனபூஷண வியாக்கியானம் முதலான பல அபூர்வ உத்தம க்ரந்தங்களை ஸொந்தமாக அச்சுக்கூடம்வைத்துப் பதிப்பித்தார். சே. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி தமிழ் லிபியில் பகவத் விஷயப்பதிப்பு செய்தது ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கு விலக்ஷண மஹோபகாரம். வேலூர். ரங்கநாதந் செட்டியார்

ஸ்ரீபாஷ்ய மூலத்தை இருமுறை வெகு நேர்த்தியாக அச்சிட்டும், பகவத் கீதையை மதத்ரய பாஷ்யங்களுடனும் அவற்றின் டீகைகளுடனும் வெகு ஆச்சரியமாகப் பதிப்பித்தும், ஸ்ரீபாகவதத்தை வியாக்யானங்களோடு வெளியிட்டும், வான்மீகி ராமாயண வசனம், ஸ்ரீபாகவத வசனம் என்றிப்படி பல தமிழ் நூல்களையும் பதிப்பித்தும் புரிந்திருக்கின்ற மஹோபகாரம் நெடுங்காலம் நினைக்கத்தக்கது. அஸ்மதாசார்யஸ்வாமி ஸு 1903ல் ஸுதர்சன அச்சுக்கூடம் நிறுவி பாராசர்யவிஜயம், ந்யாய பாஸ்கரம், சண்டமாருத ஸஹித சததூஷணி, தமிழ் லிபியிலும் தெலுங்கு லிபியிலும் ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பல, நியாய சாஸ்த்ரத்தில் பஞ்சலக்ஷணி தொடங்கி ப்ராமாண்ய வாதாந்த கதாதரீய க்ரந்தங்கள், மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் சில அபூர்வ க்ரந்தங்கள், ஈச்வர ஸம்ஹிதா ஸாத்வத ஸம்ஹிதாதி பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் பல ஸங்கீர்ண க்ரந்தங்களும் பதிப்பித்தருளினது தக்ஷிணோத்தர பாரதங்களில் ப்ரஸித்தம்.



ஸ்ரீ ஸ்வாமியின் நியமனத்தை சிரஸாவஹித்த அடியேனும் பகவத் ராமாநுஜ க்ரந்தமாலை, வேதாந்த தேசிக க்ரந்தமாலை, ஸ்ரீ வரவரமுநீந்த்ர க்ரந்தமாலை முதலியன பல பதிப்பித்ததும் பதிப்பித்துவருவதும் ஸ்ரீ ஸ்வாமியின் திருவடிநிழலில் ஒதுங்கியிருந்த பாக்ய விசேஷத்தினால் என்று ஸவிநயம் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

திருவரங்கம் பெரிய கோயில் ஸமீபமான புத்தூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீமதுபயவே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியென்கிற பெரியார் லௌகிகவைதிக வித்யாபரிச்ராந்தரும்

லக்ஷ்மீகடாக்ஷச் சிறப்பும் பெற்றவர் 30, 35 ஆண்டுகட்குமுன்பு ஸ்வயார்ஜித தனத்தை நிதியாகவைத்து ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரகாசனம் பண்ணத் தொடங்கினர். விசேஷித்துப் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளைப் புநர்முத்ரணம் செய்யவும் ப்ரவர்த்தித்தார். தமது இருப்பிடமான புத்தூரிலேயே ஸ்ரீநிவாஸம் அச்சுக்கூடமென்று முத்ராசாலையும் ஸ்தாபித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனமென்கிற மாதாந்தப் பத்ரிகையையும் ப்ராரம்பித்து அதன் மூலமாகவும் தனிப்படவும் அனேக ஸம்ப்ரதாய நூல்களைப் பிரசுரித்துவந்தார். அந்த மஹான் இற்றைக்கும் எழுந்தருளியிருக்கக் கூடியவர். ஆயினும் ஸ்ரீவைஷ்ணவ வுலகின் தெளர்ப்பாக்யத்தினால் சிலவாண்டுகட்கு முன்னமே கீர்த்திசேஷராய் விட்டார். ஆனாலும், அந்த துக்கத்தை உலகத்தார் விரைவில் மறக்கும்படியாக அவருடைய மூத்த திருக்குமாரரான ஸ்ரீ உவே. S. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் என்பவர் [எதிரே ஸேவை ஸாதிப்பவர்] திருத்தகப்பனர் தொடங்கிய நற்காரியங்களை ஒன்று பத்தாக நடத்தி வருவது மிகமிகப் பாராட்டத்தக்கது. இது காறும் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் முதலாயிரத்திலும் மூன்றாவதாயிரத்திலும் பெரும்பான்மையான பகுதிகள் வெளியிடப்பட்டு மேலும் தொடர்ந்து நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. மற்றும் பலபல நூல்களின் பதிப்பும் மங்களாசாஸனத்திற்கு உரியது. "3. புத்தூர் அக்ரஹாரம். திருச்சி 17. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M. A. B. L. அட்வகேட்" என்னும் விலாஸத்திற்கெழுதிப் புத்தகப் பட்டியல்தருவித்து விளக்கமறியலாம் விருப்பமுடையவர்கள்.

## ஸ்ரீமத் பரமஹம்ஸ. ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி தொடங்கியுள்ள மஹோபகாரங்கள்.

ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியை யறியாதவுலகமுண்டோ? நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் எம்பெருமானை நோக்கி "ஒன்றுண்டு செங்கண்மால்! யானுரைப்பது, உன்னடியார்க்கு என்செய்வனென்றே யிருத்தி நீ" என்கிறார். எம்பெருமான் அடியார்களுக்கு எத்தனையோ நன்மைகள் எல்லையின்றிச் செய்திருந்தும் ஒன்றுஞ் செய்யாதவன்போல் குறைவாளனாய் 'என்ன செய்வோம்! என்ன செய்வோம்!' என்றே அலமந்திருப்பதாக இப்பாசுரத்தில் ஆழ்வார் கண்டறிந்து கூறுகின்றார். இத்தகைய அலமாப்பு எம்பெருமானுக்குள்ளதென்பதை ஆழ்வார் எங்ஙனம் தெரிந்துகொண்டாரென்னில், *செங்கண்மால்!* என்று விளித்திருக்கையாலே எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்கப்பெற்ற ஆழ்வார் அவனது திருக்கண்ணோக்கத்திலிருந்து தெரிந்துகொண்டாரென்பது அறியக்கிடக்கின்றது. அதேபோல, நம் ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர்ஸ்வாமியும் ஏறக்குறைய இருபத்தைந்து வருஷகாலமாக ஆங்காங்கு விசிஷ்டாத்வைத ப்ரசாரக ஸங்கங்களை ஏற்படுத்துவது முதலிய திகந்த விச்ராந்தங்களான பலபல அதிமாநுஷ க்ருத்யங்களைச் செய்தருளியிருந்தும் த்ருப்தி பெறாதவராய் தற்காலம் ஒரு அபூர்வ ஸங்கல்பம் செய்தருளியிருக்கின்றார். அதாவது,

"ஆதியிலே அரவரசையழைத்தரங்கர் அவனியிலே யிருநூறாண்டிருநீயென்னப்
பாதியிலே உடையவராய்வந்துதோன்றிப் பரமபதம்நாடியவர் போவேனென்ன,
நீதியாய்முன்போல நிற்கநாடி நிலுவைதனை நிறைவேற்றிவாருமென்னச்
சாதாரணமெனுமா வருடந்தன்னில் தனித்துலாமூலநாள் வந்தார்தாமே."

என்று மாமுனிகளின் திருவடிகள் பணித்தபடியே அஸாதாரணமென்னும்படியான

ஸாதாரண ஸம்வத்ஸரத்திலே ஜகதப்புதயைக மூலமான ஐப்பசியில் திருமூலத்து அவதரித்தருளின மணவாளமாமுனிகளுக்கு ஆறுவது சதாப்த பூர்த்திக் கொண்டாட்ட மஹோத்ஸவத்தை ஆடம்பரமில்லாமல் லோகாபிராமமாக நடத்தியருளத் திருவுள்ளம் பற்றி, பிறரிடத்தில் ஒரு காகணிகாமாத்ரமும் பெற விரும்பாதே, சிஷ்யர்களால் திருவடிக் காணிக்கையாக ஸமர்ப்பிக்கப்படும் த்ரவ்யத்தையேகொண்டு, மணவாளமாமுனிகளின் பூர்வாவதாரமான பகவத் பாஷ்யகாரரருளிச்செய்த ஸகல க்ரந்தங்களையும் தெலுங்கு லிபியிலும் தேவநாகர லிபிலும் ஸுபரிஷ்க்ருதமாக அச்சிடுவிக்கவும், ஸ்ரீமத் வரவாமுநீந்த்ர க்ரந்தமாலையை முப்பது வருடங்களுக்கு முன்பு அடியேன் தெலுங்கு லிபியில் அச்சிடுவித்தது பத்து வருடங்களுக்கு மேலாக துர்லபமாய்விட்டபடியாலே அதைத் தெலுங்கு லிபியிலேயே அச்சிடுவிக்கவும், அதற்கு ஸம்ஸ்க்ருத ஆந்த்ர பாஷைகளில் தாத்பர்யாநுவாதங்கள் அச்சிடுவிக்கவும் திடமாக ஸங்கல்பித்தருளி இரண்டு பாதமாகவே முத்ரண காரியங்களை நடப்பித்தருளாநின்றார்.



நாமறிந்த காரியங்களிவை; இன்னமும் ஸ்வாமி திருவுள்ளத்தில் அநுக்ஷணம் தோன்றும் மனோரதங்களையும் அவற்றின் கங்குகரையற்ற ப்ரவாஹ பரிவாஹங்களையும் ஆரே யறியவல்லார். ஸ்ரீ வைஷ்ணவ மடாதிபதிகள் பல திசைகளிலும் பலருளர். ஒவ்வொருவரும் இங்ஙனே சிரத்தை கொண்டு பணிபுரிந்தால், "நான் ஆளவந்தாரோடு சேர்ந்திருந்தேனாகில் பரமபதத்திற்குப் படி கட்டியிருப்பேன்" என்று எம்பெருமானார் பணித்தருளினதாக ப்ரஸித்தமாயுள்ள வார்த்தை நமது காலத்தில் ஈடேறுமென்னக் குறையில்லை. ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி எம்பெருமானாரைப்போல் இந்நிலவுலகில் நீடுழி வாழ்ந்தருளி ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்கு அபூர்வ விலக்ஷண மஹோபகாரங்களைச் செய்துகொண்டும் செய்வித்துக்கொண்டும் விளங்கவேணுமென்று பேரருளாளன் திருவடிகளில் பிரார்த்திக்கின்றேன். ... ... ... ○

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்

# கீலகஹு மீன விசாகோத்ஸவப் பத்திரிகை.

ஸ்ரீ ஸ்வாமியின் எழுபத்தெட்டாவது திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு

ஸ்ரீ காஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்

நாளது பங்குனி௴ 14௳ (27—3—69) வியாழக்கிழமை புனர்வசு முதல்

பங்குனி௴ 23௳ (5—4—69) சனிக்கிழமை திருவிசாகம் வரை

வேதபாராயணம், திவ்யப்ரபந்தஸேவை, ரஹஸ்யாநுஸந்தானம், ஸ்தோத்ரபாடம், வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும். ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

வேதபாராயண கோஷ்டிகள் கடந்த ஸம்வத்ஸரங்களிற்போலவே ஸாமவேதம், யஜுர்வேதம் க்ரமாந்தம் திருவீதிவலத்துடன் நடைபெறும்.

இங்ஙனம்,

காஞ்சீபுரம்,
10-3-69.

பிரதிவாதி பயங்கரம் செல்வமணி என்கிற
ரங்கநாத தாஸன்.

SRI KANCHI MAHA VIDWAN JAGADACHARYA SIMASANADHIPATHI

# P. B. ANNANGARACHARYA SWAMI'S

## SEVENTYNINTH BIRTH DAY CELEBRATIONS

The Seventyninth Birth day of Sri Swami is being celebrated this year at his residence in Kanchi from 27—3—69 to 5—4—69 Saturday Vedas, Divya Prabandhams, Stotras and Rahasyas will be chanted. Procession of the Veda Goshti and religious lectures will also take place as usual.

You are cordially invited to attend,

Kancheepuram,
10—3—69.

CHELLAMANI alias
P. B. RANGANATHACHARYA.

# திருக்கச்சிநம்பிகளநுபவம்.

நமக்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருகாரண விசேஷத்தினால் உத்தேச்யமாகிறது. ஆழ்வார்களும் ஆசாரியர்களுமன்றோ நமக்கு முக்கியமாக உத்தேச்யர்களாகின்றார்கள். ஆழ்வார்களில் ஒருவரும் அவதரியாத மாதங்கள் சில இருந்தாலும் ஆசாரியர்கள் அவதரியாத மாதம் ஒன்றுகூட காணக்கிடைக்காது. ஆழ்வாருடையவும் ஆசாரியருடையவும் திருவவதாரத்தினால் புனிதமான மாதங்களும் பலவுண்டே. ஆழ்வார்களில் குலசேகராழ்வாருடையவும், ஆசாரியர்களில் திருக்கச்சிநம்பியுடையவும் திருவவதாரத்தினால் புனிதமாயது மாசி மாதம். இப்போது வெளிவரும் இந்த ஸ்ரீராமாநுஜன் பங்குனி மாதத்துப் பத்திரிகையாயினும், மாசி மாதத்துப் பத்ரிகை மாசிப் பிறப்பன்றே வெளிவந்து விட்டபடியால் மாசி மாதத்து அநுபவம் இப்பத்திரிகையில்தான் நிகழநேர்கின்றது.

ஒரு ஆச்சரியத்தை முன்னம் தெரிவிக்க விரும்புகிறேன். 24—2—69 ஆகிய இன்று காலை நித்யக்ருத்யங்களை நிறைவேற்றிக்கொண்டு என்னுடைய கார்யாலயத்தில் அமர்ந்து இன்று, முந்துறமுன்னம் மிருகசீர்ஷத்திலவதரித்த திருக்கச்சிநம்பியைப்பற்றியும், பிறகு புநர்வஸுவிலவதரித்த குலசேகராழ்வாரைப்பற்றியும் காட்டுரையெழுதவேண்டுமென்று ஸங்கல்பங்கொண்டு எழுதத்தொடங்கி மகுடமிட்டவுடனே [8 மணிக்கு] தபால்கள் வழக்கப்படி வந்து சேர்ந்தன. அவற்றுள் முதல் கடிதத்தைப் பிரித்தவுடனே "இப்போது தேவரீர் திருக்கச்சிநம்பி குலசேகராழ்வார்களின் திவ்ய குணாநுபவத்திலே அமர்ந்திருக்கக்கூடுமென்று உட்கண்ணால் காண்கிறேன்" என்பதை அதில் முதல் வாக்கியமாகக் கண்டேன். அந்த மஹானுடைய திருநாமம் இங்கு ப்ரஸ்தாவிக்க வேணுமோ? அவர்க்கு உடனே நான் பதில் எழுதினேன்—தேவரீர் உட்கண்ணால் கண்டதன்று; கட்கண்ணாலேயே கண்டறிந்து எழுதியதுதான் என்பதில் என்மனம் ஐயுறவில்லை' என்று. *ஆக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா* என்கிற ஸ்ரீராமாயண வசனத்தையும் அவர்க்கு நினைவூட்டினேன்.

இதிலிருந்து ஒரு சிறு கதை நினைவுக்கு வந்தது. பரம வைதிகரான ஒரு ஸ்வாமி ஒரு நாள் காலையெழுந்து தம்முடைய வயலுக்குச் சென்றார். அங்கே உழவர்களோடு ஒரு விவாதம் விளைந்ததிவர்க்கு. மேலதிகாரிகளுக்குச் செய்தி சொல்லியனுப்பிவிட்டு இவர் திருமாளிகைக்கு வந்து நீராடி அனுட்டானங்களை முடித்துக்கொண்டு பெருமாள் திருவாராதனத்திலமர்ந்தார். ஆனாலும் இவர்க்குத் திருவாராதனத்தில் நெஞ்சு செல்லவில்லை. வயல்வழக்கிலேயே நெஞ்சு ஊன்றி நிற்கிறார். இந்த நிலைமையில் வயற்காட்டிலிருந்து தோட்டியும் தலையாரியும் வந்து வாசலில் நிற்கிற மருமகளை நோக்கி 'அய்யா எங்கே?' என்று கேட்க, ஏதுக்காகக் கேட்கிறாய்? என்ன, 'உடனே அய்யாவை வயலுக்கு அழைத்துச் செல்லவேண்டியிருக்கிறது' என்ன, அதற்கு மருமகள் 'அய்யா அங்கேதான் சென்றிருக்கிறார்' என்ன, திருவாராதன அறையில் நிற்கிற அய்யா இதைக் கேட்டு மிக வியப்புற்றார்; தாம் உள்ளேயிருக்கிற விஷயம் மருமகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் அந்தப் பெண் அப்படிச் சொன்னதற்கு வியப்படைந்தார். நம் உடல் இங்கிருந்தாலும் நம்முள்ளமெல்லாம் வயற்காட்டில் சென்றிருக்கிறதென்பதையறிந்தே

இந்தப் பெண் இங்ஙனே சொல்லிற்று என்று தெரிந்துகொண்ட அவர் தேவியாரை விளித்து 'அடீ! இந்தப் பெண்ணுக்கு நீ என்ன உணவு இடுகிறாய்? உள்ளபடி சொல்லு' என்ன; 'உளுந்தம்பருப்புத் துவையல் என்று சொல்லிப் பசுஞ்சாணியையிடுவேன்' 'இந்தா தீர்த்தமென்று சொல்லி கோமயத்தைக் கொடுப்பேன்' என்று சொல்லத் தொடங்கி 'அதையெல்லாம் அந்தப் பெண் முகக்கடுப்பில்லாமலே தின்றுவிடும்' என்றுரைத்து முடித்தாள். 'அந்த கவ்யத்தின் ப்ரபாவமேயிது' என்று தெரிந்துகொண்டாராம். ப்ராஸங்கிகமானவிது நிற்க.

இனித் திருக்கச்சிநம்பியநுபவம் தொடங்குகிறேன். பெரிய பெரிய க்ரந்தங்களை யருளிச்செய்தவர்களுக்கும், உபயவேதாந்த ப்ரவசனங்களை விசேஷமாகச் செய்தவர்க ளென்று ப்ரஸித்தி பெற்றவர்களுக்குங்கூட இல்லாத பெருமையை நம்பிகளிடம் காண்கிறோம். இவர் தமக்கும் ஆசார்யரான ஆளவந்தார்க்கும் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கும் விக்ரஹ ப்ரதிஷ்டையில்லாத கோவில்களிலுங்கூட நம்பிகளுக்கு அர்ச்சையையும் உத்ஸ வோபலாலனங்களையும் காண்கிறோம். எம்பெருமானாருடைய பஞ்சாசாரியர்களில் இவரையு மொருவராகச் சிலர் கூறுவதுண்டு; அப்படியில்லை. இவரைத் தவிர்த்தே ஆசாரியர்கள் ஐவர் பரிகணிதர்களாயிராநின்றார்கள். "ராமாநுஜமுநேர் மாந்யம்" என்னும்படியான பெருமையே இவர்க்குள்ளது. மாந்யம் என்கிற இச்சொல் உண்டே, இது அனர்க்கமானது. அது நிற்க.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த தேவராஜ மங்களத்தில் "ஸ்ரீகாஞ்சீ பூர்ண மிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே, அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்." என்கிற சுலோகத்தினாலும் குருபரம்பராப்ரபாவாதிக்ரந்த விசேஷங்களாலும் தேவப்பெருமாள் அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து நம்பிகளோடே வார்த்தையாடினவ ரென்பது நிஸ்ஸந்தேஹமாக அறியப்படுகின்றது. "திருக்கச்சிநம்பியாறு வார்த்தைகள்" என்று ப்ரஸித்தமாகவுமுள்ளது. *அஹமேவ பரம் தத்வம் தர்சனம் பேத ஏவ ச, மோ க்ஷோபாய: ப்ரபத்திஸ் ஸ்யாத் பூர்ணாசார்ய ஸமாச்ரய:. தேஹாவஸாநே முக்திஸ் ஸ்யாத் அந்திம ஸ்ம்ருதிவர்ஜனம்* என்கிற ஸம்ஸ்க்ருதச் லோகங்களும்,

"செப்புகின்ற பரதத்வம் யானேயென்னச்செப்புதி
வேறொப்பிலாதாய் தரிசனமும் பேதமென்றே யுரைத்திடுக
தப்பிலாதவுபாயமதும் ப்ரபத்தியென்றே சாற்றிடுக
அப்படிகல்க இவையன்றி நினைவும் வேண்டா அந்திமத்தில்
இந்தச்சரீர அவதானந்தன்னிலிசையும் மோக்கமது
அந்த மில்லாக்குணத்தினனுக்காசாரியனும் பெரியநம்பி
சிந்தைதன்னுளிவையெல்லாம் சிந்தித்திருந்தானிளையாழ்வான்
முந்தியிவை நீ மொழியென்றே யருளிச்செய்தானருளாளன்."

என்கிற வடிவழகிய நம்பிதாஸரின் செய்யுளும் அந்த ஆறுவார்த்தைகளை நன்கு நிரூபித்துள்ளன. இவற்றுக்கு அடியேனும் வியாக்கியானமெழுதி வெளியிட்டிருக்கிறேனாதலால் இங்கு விவரிக்கவில்லை.

இவ்விஷயத்தில் சிலர் சங்கிப்பதை யநுவதித்துப் பரிஹாரம் செய்ய விரும்புகிறேன்; ஸ்ரீபாஷ்யகாரர் வித்யார்த்தி தசையிலிருந்தே மிகவும் ப்ரபுத்தர்; திருத்துழாய் பரிமளத்தோடே அங்குரிக்குமாபோலே ஸ்வாமி ஸகல சாஸ்த்ரார்த்தங்களிலும் உண்மையுணர்ச்சியோடு அவதரித்தவராகையாலே இவர்க்கு எதிலும் ஸம்சயமோ விபர்யயமோ இருக்க ப்ரஸக்தியில்லை. அதிலும், ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம், சித்து அசித்து ஈச்வரன் என்னும் மூன்று தத்துவங்கள் இயற்கையாக வெவ்வேறாயுள்ளன......என்பன போன்ற விஷயங்களில் ஸ்வாமிக்கு ஸந்தேஹமுண்டாக, ப்ரஸக்தியில்லையாயிருக்க, இவர் திருக்கச்சிநம்பிகள் பக்கலிலே விஜ்ஞாபித்து ஸந்தேஹ நிர்ணயம் பெற்றாரென்று சொல்லுகிறவிது பொருந்துமோ? என்பது சிலருடைய சங்கை.

இதற்குப் பரிஹாரமுணர்த்துகிறோம். ஆறுவார்த்தையாகச் சொல்லப்படுகிற வற்றில் எந்த ஆசாரியர் பக்கலிலே ஆச்ரயிப்பது என்கிற ஒரு விஷயத்தில் மட்டுமே ஸ்வாமிக்கு ஜிஜ்ஞாஸையிருக்க ப்ரஸக்தியுண்டு. ஆளவந்தார் திருவடிகளிலே ஆச்ரயிக்க விரும்பியிருந்தார்; அது வாய்க்கவில்லை. பிறகு திருக்கச்சிநம்பிகளின் ஞானபக்தி விரக்திகளின் பௌஷ்கல்யத்தைக்கண்டு அவர் பக்கலிலே ஆச்ரயிக்கவெண்ணி அவரை யநுவர்த்தித்தார்: அந்த நசையை நம்பிகள் ஸர்வாத்மநா அநுசிதமென்று அறவே போக்கி விட்டார். பின்னை எந்த ஆசார்யரிடத்தில் திருவிலச்சினை பெறலாம்! என்று தளும்பியிருந்ததுண்டு. ஆகவே இவ்வொரு விஷயம் தவிர மற்ற ஐந்து விஷயங்களில் ஸ்வாமிக்கு ஸந்தேஹமிருக்க ப்ரஸக்தியில்லைதான். ஆனாலும் ஜிஜ்ஞாஸை விளைந்த வழியென்னென்னில், கூரத்தாழ்வான் (வரதராஜ ஸ்தவத்தில்) "ஸம்வதேத கில யத் ப்ரமாந்தரைஸ் தத் ப்ரமாணமிதி யே ஹி மேநிரே" என்னும் ச்லோகத்தினால் ஒரு பக்ஷம் ஸாதிக்கிறார்: (அதாவது)—ப்ராமாணிகமானவொரு விஷயத்திற்கு ப்ரமாணாந்தரஸம்வாதமுமுண்டானால் அது ப்ரபலமான ப்ராமாண்யத்தைப் பெறும் என்கை. அந்த ரீதியில் தேவப்பெருமாளுடைய திருவுள்ளத்தில் இசைவையுங் கண்டு களிக்கக் கருதிய எம்பெருமானார் திருக்கச்சிநம்பிகள் மூலமாக அதனை லபிக்கப் பெற்றாரென்பதில் விப்ரதிபத்திகொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஆண்டாள் திருப்பாவையில் இரண்டாம் பாட்டில் *உய்யுமாறெண்ணியுகந்து* என்றதில், உய்யும் ஆறு—உஜ்ஜீவனஹேதுவான ஆறு வார்த்தைகளை எண்ணியுகக்கும் விஷயமும் பெரியோர்களால் அநுஸந்திக்கப்படுவதுண்டு. *பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் திருவாக்கில் இவ்வர்த்தம் வெளிவருவதில் அஸம்பாவிதத்வசங்கைக்கு அவகாசமில்லையன்றோ.

ஸகல சாஸ்த்ரப்ரமேயமான தத்வஹித புருஷார்த்தங்களில் மிக முக்கியமானது புருஷார்த்தம். கைங்கர்யத்தையே புருஷார்த்தமாகக் கொண்டது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம். நம்மாழ்வார் *வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்* என்றும், ஆளவந்தார் *கதாஹமைகாந்திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி* என்றும், எம்பெருமானார் *நித்ய கைங்கர்ய ப்ராப்த்யபேக்ஷயா......நித்யகிங்கரோ பவாநி* என்றுமிந்த ஸ்ரீஸூக்திகளாலே நித்யகைங்கர்யத்தில் பாரிப்பும் ப்ரார்த்தனையுமாக இருந்தார்களேயன்றி அனுட்டித்து மகிழ்ந்ததாகத் தெரியவில்லை. இது அனுஷ்டான சேஷமானது திருக்கச்சிநம்பிகள் பக்கலிலேயாதலால் இதுபற்றியே இவருடைய மஹிமை நிகரற்றது. ...

# திருமலையில் சித்ரகவித்வ விஜ்ஞாபனம்.

ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி. ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் சென்ற 1968, நவம்பர் மாதத்தில் திருமலையில் மஹாக்ரது ஸமாப்தி விசேஷம் நடத்தியருளின போது அடியேன் மூன்று நாள் மூன்று சித்ரகவித்வம் விஜ்ஞாபனம் செய்து அதன் விவரணமாக மூன்று உபந்யாஸங்கள் செய்தேன். திருவேங்கடமுடையான் விஷயமாக ஒன்றும், சக்ரவர்த்தி திருமகன் விஷயமாக ஒன்றும், ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி விஷயமாக ஒன்றும் ஆக மூன்றும் சித்ரகவித்வங்கள். இவற்றில் சித்ரமென்னவென்றால், 1968-ஆம் வருஷத்தில் பதினோராவது மாதத்தில் இன்ன தேதியில் இவ்வுபந்யாஸம் நடத்தப்படுகிற தென்பதைக் காட்டும் லக்கங்களையிட்டு ச்லோகரசனை. அர்த்தம் க்ரமேண திருவேங்கடமுடையான் முதலிய மூவரைப்பற்றியது. அப்போது அவ்வுபந்யாஸங்களைக் கேட்டிருந்தவர்களில் சில ஆப்தர்கள் அந்த ச்லோகங்களை ஸ்ரீராமாநுஜனில் வெளியிட்டு அர்த்த விவரணமும் செய்யவேணுமென்று அந்நாள் முதல் அடிக்கடி எழுதி வருகிறார்கள். அவற்றை அடியேன் ஏடுபடுத்தி வைத்துக்கொள்ளவில்லை. அப்போதொரு சிந்தை செய்து விண்ணப்பித்த ச்லோகங்கள் அவை. திருவேங்கடமுடையான் விஷயமான முதல் ச்லோகத்தைமட்டும் ஒருவாறு நினைவுபடுத்திக்கொண்டு ஈண்டெழுதி விவரிக்கிறேன்.

## 1. சித்ரகவித்வ ச்லோகம்.

ஏகச் சக்ஷுர் த்விலோக்யா: நவபரிபிநுத: ஷஷ்ட ஸௌரீக்ஷிதாஸ்ய:
ஸாக்ஷாத்சைலேஷ்டமோஸௌ உபயதநுதயா கீர்த்திதச் சாத்விதீய:,
ஸ்ரீமாந் ஸ்ரீவேங்கடாத்ரீச்வர இஹ விலஸந் ஸ்வாத்மநா துல்யரூபே
ஸ்ரீமந்நாராயணேக்க்யே யமிநி விதநுதாத் ஸர்வகார்யார்த்தஸித்திம்.

### — இதற்குச் சுருக்கமான விவரணம். —

அப்போது நடந்துகொண்டிருந்த வருடம் 1968. அதில் முதல் லக்கம் ஒன்று. அதற்காக [ஏகம் சக்ஷுர் த்விலோக்யா:] வேதத்தில் (4-6) பகவானைப்பற்றி *சக்ஷுர் தேவாநாம் உத மர்த்யாநாம்* என்று விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் ஒரே கண்ணாயிருப்பவன் என்றது. வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபனான நம்மாழ்வார் அந்த வேதவாக்யத்தைத் திருவுள்ளத்திற்கொண்டு இதைத் திருவேங்கடமுடையான் விஷயமாக்கி *கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு, தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே* [திருவாய்மொழி 1-8-3] என்றருளிச் செய்தார். ஸுதர்சந சதகத்தில் இந்த வேதவாக்யத்தையே கையாண்ட கூரநாராயணஜீயர் *ஏகம் லோகஸ்ய சக்ஷு:* என்று பணிக்கையாலே அங்கிருந்து (ஏகம்) என்பதைக் கொண்டேன். வேத வாக்யத்தில் தேவாநாம என்றும் மர்த்யாநாம் என்றும், திருவாய்மொழியில் *மண்ணோர் விண்ணோர்க்கு* என்றும் சொன்னதைத் தழுவி (த்விலோக்யா:) என்றேன். ஆக, ஒன்று என்கிற லக்கம் பொருளுக்குச்சேரத் தெரிவிக்கப்பட்டதாயிற்று.

1968-ல் அடுத்த லக்கம் ஒன்பது. அதற்காக [நவபிரபிநுத:] என்றேன். ஸ்ரீரங்கநாதன் 'பதின்மர்பாடும் பெருமாள்' என்று கட்டியம் பெற்றவர். ஆழ்வார்களுள்

தொண்டரடிப்பொடியாழ்வாரொருவர் நீங்கலாக மற்று ஒன்பதின்மரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றவர் திருவேங்கடமுடையான். ஆகவே, நவபி:—ஒன்பது ஆழ்வார்களால், அபிநுத—துதிக்கப்பட்டவர் என்கை.

வருட லக்கம் 1968-ல் அடுத்த லக்கம் ஆறு. அதற்காக [ஷஷ்டஸூரீக்ஷிதாஸ்ய:] ஷஷ்டஸூரி:—ஆறுமவரான ஆழ்வார் ஸ்ரீ குலசேகராழ்வார்; அவர் தமது திருமொழியில் *ஊனேறு செல்வமென்று தொடங்கும் திருவேங்கடப் பதிகத்தில் *நெடியானே வேங்கடவா! நின்கோயிலின் வாசல் .....படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே* என்றருளிச்செய்து திருவேங்கடமுடையானுடைய திருமுகமண்டலத்தைக் கண்டு கொண்டிருக்கையாலே அவ்வாழ்வாராலே காணப்பட்ட திருமுகமண்டலத்தை யுடையவர் திருவேங்கடமுடையான் என்றேன்.

வருட லக்கமான 1968-ல் இனியுள்ளது எட்டு. அதற்காக [ஸாக்ஷாத் சைலோஷ்டம:] ஸாக்ஷாத் அஷ்டம: சைல:—ஏழுமலையானென்கிறபடியே ஏழுமலையாக வுள்ளது திருவேங்கடம். அதில் எம்பெருமான் தனியே ஒரு மலையாக விளங்குவதாய் ஆழ்வார்கள் *மலையே திருவுடம்பு* வடமாமலையுச்சியை*நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே! வாவென்று கூவும்* என்றிவை முதலான பாசுரங்களினால் காட்டியருளின படியால் "ஸாக்ஷாத் அஷ்டமச் சைல: அஸெள" என்றது பொருந்தும். ஆக 1968 என்னும் வருட லக்கம் நான்கு விசேஷணங்களினால் செவ்வனே ஸூசிதமாயிற்று.

இனி [உபயதநுதயா கீர்த்தித:] என்பதனால் (நவம்பர்) பதினோராவது மாதம் ஸூசிதமாகிறது. பதினொன்று என்பதை யெழுதுவதற்கு இரண்டு கோடு இடுவோம். அதாவது 11 இப்படி இரண்டு ரேகைகள் இடுவோம். திருவேங்கடமுடையானைப் பாடாநின்ற பேயாழ்வார் மூன்றாந்திருவந்தாதியில் *தாழ்சடையும் நீண்முடியும்* என்கிற பாசுரத்தில் *இரண்டுருவு மொன்றாயிசைந்து* என்று தலைக்கட்டியிருக்கையாலே அதை நினைவூட்டி "உபயதநுதயா கீர்த்தித:" என்றேன். இனி தேதியைக் குறிப்பிடவேண்டிய தோன்று நிற்கிறது. நவம்பர் மாதத்தின் முதல் தேதியில் இந்த மஹாக்ரதுவின் தொடக்கம்; இந்தவுபந்யாஸம் நடந்தது இரண்டாந்தேதியில். ஆக இவ்விரண்டும் தோன்றும்படி [அத்விதீய:] என்றேன். திருவேங்கடமுடையான் அத்விதீயனென்பது விவரணநிரபேக்ஷம். அத்விதீய பதத்தினால் ஒன்று என்கிற லக்கம் தெரிவிக்கப்படுவது போல் இரண்டு என்கிற லக்கமும் தெரிவிக்கப்படலாம்; த்விதீயபத ச்ரவணத்தைக் கொண்டு. (அதவா) *அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:* என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் அநுத்தமமென்கிற பதத்திற்குப்போல பஹுவ்ரீஹிஸமாஸமுங் கொள்ளலாம்.

ஆக இத்தகைய பெருமைகள் வாய்ந்த திருவேங்கடமுடையான் [ஸ்வாத்மநா துல்யரூபே ஸ்ரீமந்நாராயணக்யே யமிநி] ஸத்யஸங்கல்பத்வத்தில் தன்னையொத்திருக்கின்ற நம் ஸ்ரீமந்நாராயணஜீயர்ஸ்வாமி பக்கலிலே. [ஸர்வகார்யார்த்தஸித்திம் விதரதாத்] மேன்மேலும் ஸ்வாமி நினைப்பிடும் ஸகல கார்யங்களும் இங்ஙனே நிறைவேறும்படி யருள்செய்க. ... ... ... ... ...

திருவேங்கடமுடையான் விஷயமான சித்ரகவித்வம் முற்றிற்று.

# ஸந்தோஷகரமான ப்ராசீனவிவாஹக்ரமம்.

*ந சலதி நிஜவர்ணதர்மத: ய:* என்றபடி பரமவைதிக ஸார்வபௌமராய் ஜ்ஞாநாநுஷ்டான சேவதியாய் விளங்கின அஸ்மத்ஸுஹ்ருத்தமரான மாம்பலம் மஹர்ஷி வாஸுதேவாசார்ய ஸ்வாமியை அறியாதவர் ஒருவருமிலர். அந்த ஸ்வாமி தடஸ்தராய் ஸித்தமனஸ்ஸுடன் பல ஸம்ப்ரதாய விஷயங்களை 'வேதாந்த தீபிகை, ந்ருஸிம்ஹப்ரியை' வாயிலாக ஆர்ஜவத்துடன் விவரித்தவற்றை அநுபவித்தவர்கள் பலர். அந்த மஹர்ஷி



ஸ்வாமியின் பௌத்ரனும் அஹோபில மடம் ஆஸ்தான வித்வானாய் சிரகாலம் எழுந்தருளியிருந்த ஸ்ரீ உவே. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் தௌஹித்ரனுமான சிரஞ்சீவி. வாஸுதேவனுக்கு கடந்த தைத் திங்கள் 7வ (20-1-69) அன்று திருக்குடந்தையில் ஸ்ரீஉவே: அக்நிஹோத்திரம் பட்டுஸ்வாமியின் ஸ்யாலருடைய பௌத்ரியான ஸௌபாக்யவதி, அலர்மேல்சந்திரிகாவுடன் விவாஹம் சாஸ்த்ரோக்த ரீதியில் ஐந்து நாட்கள் வைதிக க்ரியா கலாபங்களில் சிறிதளவும் லோபமில்லாமல் வெகு சிறப்புடன் நடைபெற்றதைக் கேட்டு மிகவும் ஸந்துஷ்டனாய் இந்த ஸந்தோஷத்தை வைதிகவுலகமெல்லாம் அநுபவிக்குமாறு செய்துகொண்டேன். இந்த வைபவத்தில் பல திவ்ய தேசத்து எம்பெருமானுடைய ப்ரஸாதங்களும், ஸ்ரீமத் அஹோபிலமடம், ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம், காஞ்சி காமகோடி ஜகதாசார்யர்—இவர்களுடைய மந்திரரக்ஷையும், விசிஷ்ய பல வித்வத் வரேண்யர்களுடைய ஸாந்நித்யமும், அநுக்ரஹமும் விசேஷ சோபையைத் தந்தன.

சென்னை, ஸம்ஸ்க்ருத அகடமியின் கார்யதர்சியும் மாம்பலம், அஹோபிலமடம் ஹைஸ்கூல் நிர்வாஹியுமாய் ஸம்ஸ்கிருதத்தின் அபிவிருத்திக்கு பரிச்ரமப்படும் ஸ்ரீ வாஸுதேவனுடைய பகவத் பாகவத ஆசார்யபக்தி அதிசயமும், வைதிகச்ரத்தையும், வித்வத் பக்ஷபாதமும் மிகவும் கொண்டாடத்தக்கது. இந்த தம்பதி, ஆயுள் ஆரோக்யத்துடனும் பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்ய உபயுக்த தநதான்ய ஸம்ருத்தியுடனும் நீங்காத செல்வத்துடனும் நிறைந்து வாழ ஹார்த்தமாய் ஆசாஸிக்கிறோம்....

# குலசேகரப் பெருமாள் திருமொழியநுபவம்.

"மாசிப் புனர்பூசங் காண்மினின்று மண்ணுலகீர்!
தேசித் திவசத்துக் கேதென்னில்—பேசுகின்றேன்
கொல்லி நகர்க்கோன் குலசேகரன் பிறப்பால்
நல்லவர்கள் கொண்டாடும் நாள்."

மாசி மீ 17உ (28—2—69) மாலை ஐந்து மணி முதல் ஒன்பது மணி வரையில் நம் தேவப்பெருமாளும் பெருந்தேவித் தாயாரும் அற்புதமான புறப்பாடு கண்டருளி எம்பெருமானார் ஸன்னிதிக்கெழுந்தருளி அங்கே கோயில் கொண்டிரா நின்ற ஸ்ரீ குலசேகராழ்வார்க்கு திவ்யாநுக்ரஹம் செய்தருளி ஸேவை சாத்துமுறைகள் தீர்த்த ப்ரஸாத விநியோக கோஷ்டியுடனே லோகோத்தரமாக நடைபெற்ற பின்பு அடியேன் ஸ்வஸ்தானம் சேர்ந்து இவ்வநுபவக் கட்டுரையை யெழுதத் தொடங்குகின்றேன்.

இவ்வாழ்வாருடைய அருளிச்செயல் பெருமாள் திருமொழியென வழங்கப் படுகின்றது. இவ்வாழ்வாரைக் குலசேகரப் பெருமாள் என வழங்கும் ஸம்ப்ரதாய முளதாதலால் இவருடைய திவ்வியப்பிரபந்தம் பெருமாள் திருமொழியென வழங்குதல் பெற்றது. இத்திருமொழிக்குத் தனியனிட்டருளின ஆசிரியர் "இன்னமுத மூட்டுகேன்" என்று தொடங்கினதற்கிணங்க இன்னமுதமேயான இத்திருமொழியில் சிற்சில திவ்ய ஸூக்திகளைக் கொண்டு அம்ருதாஸ்வாதனம் செய்ய விரும்புகிறேன். பெரிய பெருமாளுடைய நித்யாநுபவமும், அவ்விடத்துக் கைங்கர்ய பரர்களோடு நித்ய ஸஹவாஸமும் தமக்கு விரைவில் கிடைக்குமாறு எம்பெருமான் அருள்புரிய வேணுமென்று பிரார்த்திப்பதாய்ச் செல்லுகிற முதற்பதிகத்தில் திருக்காவேரியை ப்ரஸ்தாவியா நின்றவிவர் "தெண்ணீர்ப் பொன்னி திரைக் கையாலடி வருடப் பள்ளிகொள்ளும்" என்று ஸ்ரீரங்கநாதனுக்கு அடைமொழியிட்டார். தெண்ணீர்ப் பொன்னி யென்பதற்கு—தெளிவான தீர்த்தத்தையுடைய காவேரியென்று பொருள். திருவரங்கம் பெரிய கோயிலில் நித்யவாஸஞ் செய்துகொண்டிருந்த தொண்டரடிப் பொடியாழ்வார் "தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ் திருவரங்கம்" என்றார்; இவர் தெண்ணீர்ப் பொன்னி யென்கிறார்; இவ்விரண்டையும் எங்ஙனே நிர்வஹிக்கும்படி? என்று ஒருவர் ஒருவரைக் கேட்க; 'அவ்வாழ்வார் கண்டபோது கலங்கியிருக்கும், இவ்வாழ்வார் கண்டபோது தெளிந்திருக்கும்' என்றாராம் அவர். இரண்டுக்கும் இன்சுவைமிக்க நிர்வாஹம் கேளீர்:

"தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ்" என்ற திருமாலைப் பாசுரத்தை பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்திலே "துக்தாப்திர் ஜநகோ ஜநந்யஹம் இயம் ஸ்ரீரேவ புத்ரீ வர: ஸ்ரீரங்கேச்வர:, ஏததர்ஹமிஹ கிம் குர்யாம் இதீவாகுலா, சஞ்சச்சாமர சந்த்ரசந்தந மஹாமாணிக்ய முக்தோத்கராந் காவேரீ லஹரீகரைர் விதததீ பர்யேதி ஸா ஸேவ்யதாம்" என்கிற அற்புதமான சுலோகத்தினால் நிர்வஹித்தருளினர். (இதன் கருத்துச் சுருக்கம்.) ["ஸாகரஸ் ஸரிதாம் பதி:" என்கிறபடியே நதிகளுக்கெல்லாம் பர்த்தா கடலாகையாலே காவேரியானது கடலுக்குப் பத்தினியாம் முறைமைகொண்டுள்ளது. பிராட்டியானவள்

"க்ஷீரோதாத் ஸ்ரீஸ் ஸமுத்பூதா" என்கிற ஸ்ரீ விஷ்ணு புராண வசனத்தின்படியே கடலுக்குத் திருமகளான முறைமைகொண்டுள்ளாள்.] திருக்காவேரி நினைத்தாளாம்—தந்தையோ திருப்பாற் கடல்; தாயோ நான்; மகளோ ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மி; மணவாளப்பிள்ளையோ ஸ்ரீரங்கநாதன்; ஆக இத்தகைய அமைதிக்குத் தக்கபடி நான் என்ன விதமான சீரும் சிறப்பும் செய்யப் போகிறேனென்று விசார முற்று மனங் கலங்கி, சாமரைக்கற்றை சந்தனம் பலபல மணிகள் முத்துக்கள் ஆகிய இவற்றையெல்லாங் கொழித்துக்கொண்டு [தன்னுடைய ஹ்ருதயத்திலே யுண்டான கலக்கத்தை வெளியிலும் காட்டுபவளாய்] கலங்கின பெருவெள்ளமாக ஓடிவரும்படியைக் கண்டு *தெளிவிலாக் கலங்கல்நீர்* என்னவேண்டிற்று—என்பது பட்டருடைய ஆச்சரியமான நிர்வாஹம்.

இனி *தெண்ணீர்ப்பொன்னி* என்ற ப்ரக்ருதஸ்தலத்தில் காணும் தெளிவுக்கு நிர்வாஹம்—ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், கண்ணபிரான் திருவவதரித்ததனால் யமுனைக்கு உண்டான ஆனந்தாதிசயத்தைக் கூறுகின்ற பராசரர் "ஸந்தஸ் ஸந்தோஷமதிகம் ப்ரசமம் சண்டமாருதா:, ப்ரஸாதம் நிம்நகா யாதா ஜாயமாநே ஜநார்தநே" [5-3-4.] என்றார். அதுபோல, பரமபதநாதன் ஸ்ரீவைகுண்டத்தைவிட்டுக் காவிரிக்கரையிலே குடிலமைத்துக் கொண்டு ஸம்ஸாரம் கிழங்கெடுத்தாலல்லது பேரேனென்று படுகாடுகிடக்கிறபடியைக் கண்ட ஸந்தோஷாதிசயத்தாலே திருக்காவிரி தெளிவுற்றதாயிற்று. "ப்ரஸாதம் நிம்நகா யாதா" என்றது இங்கு உயிர்நிலை.

இனி இரண்டாம்பாட்டில் *கடியரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும் மாயோனை மணத்தூணேபற்றிநின்று என்வாயாரவென்றுகொலோ வாழ்த்துநாளே* என்றவிடத்துச் சிறிது ரஸாநுபவம் செய்வோம். பெரிய பெருமாள் திருமுன்பே (இற்றைக்கும்) விளங்குகின்ற ஸுவர்ண கவசிதங்களான இரண்டு திருத்தூண்களுக்குத் திருமணத்தூண் என்பது அநாதியான வ்யபதேசம். "ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:" என்று வேதாந்தங்களில் ஓதப்பட்ட எம்பெருமானுடைய திவ்யபரிமளமே திருத்தூணாக வடிவுகொண்டு [மணம்—பரிமளம்] நிற்கின்றது போலும். ஆமோதஸ்தம்பமென்று இதற்கு வடமொழிப் பெயர். இந்த ஆழ்வார் "மணத்தூணருகேநின்று என்வாயாரவென்றுகொலோ வாழ்த்துநாளே" என்றால் அது பொருத்தமாயிருக்கும்; அங்ஙனமருளிச்செய்யாது "மணத்தூணே பற்றிநின்று" என்று அத்தூணைப் பிடித்துக்கொண்டு நிற்கவேண்டியதாக அருளிச் செய்ததன் கருத்தை பட்டர் தாமே ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்,

"சேஷசய லோசநாம்ருத நதீரயாகலித லோலமாநநாம்,
ஆலம்பமிவாமோதஸ்தம்பத்வய மந்தரங்க மபியாம:"

என்கிற ச்லோகத்திலே அற்புதமாக வெளியிடுகிறார். (அதாவது) பரமபக்தர்கள் பெரிய பெருமாளுடைய திருமுன்பே நின்றவாறே திருக்கண்ணோக்கமாகிற அமுதவாற்றின் பெருவெள்ளமானது அந்த பக்தர்களை ஒருமித்துநின்று அநுபவிக்கவொட்டாதே தாக்கித் தள்ளி அலமரச்செய்யுமளவில், அவர்கள் நிலைகலங்காதே அவலம்பமாகப் பற்றிக்கொண்டு நிற்பதற்காக நாட்டப்பட்டுள்ளனவாம் இத்திருமணத்தூண்கள். இது உண்மையில் ஆழ்வாருடைய திருவுள்ளத்தினுள் உறைந்த அரும்பெரும் பொருளைக் கண்டறிந்து வெளியிட்டபடி.

இப்பதிகத்தில் "வன்பெருவானகமுய்ய அமருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத், துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந்தொண்டர் வாழ, அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளுமணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள், இன்பமிகு பெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனே யென்றுகொலோவிருக்கு நாளே" என்கிற பத்தாவது பாசுரம் பக்தர்கள் நெஞ்சுகுளிர நிச்சலும் அநுபவிக்கவுரியது. இப்பாசுரத்தில் முன்னிரண்டடிகளுக்குச் சேர

"புவோ பூத்யை பூபுஜாம் பூஸுராணும்
தீவோ குப்த்யை ச்ரேயஸே தேவதாநாம்,
ச்ரியை நாஜ்ஞாம் சேஷவம்சோத்பவாநாம்
ஸ்ரீமத் ரங்கம் ஸேவ்யஜராமாஜகாம."

என்கிற புராண ச்லோகத்தைப் பெரியவாச்சான்பிள்ளை யெடுத்துக்காட்டியருளினர்.

இரண்டாவது பதிகம்—தேட்டருந்திறல்தேன். பகவத்பக்தி அதிகரித்தால் அது பாகவதபக்தியிலே மூட்டுமன்றோ. *அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம் அடியாரடியோங்களே* என்றும் *த்வத்ப்ருத்யப்ருத்ய பரிசாரகப்ருத்யப்ருத்ய ப்ருத்யஸ்ய ப்ருத்ய:* என்றும் அநுஸந்திப்பது பகவத்பக்தியின் பரீவாஹமேயன்றோ. இத்தகைய பாகவதபக்தி விளையவில்லையென்றால் பகவத்பக்தி மெய்யானதன்று என்றறுதி யிடலாம் என்பர்கள் நம் ஆசாரியர்கள். இப்பதிகத்தின் நிகமனப்பாசுரத்தில் *அரங்கன் மெய்யடியார்கள்தம் எல்லையிலடிமைத்திறத்தினில் என்றுமேவுமனத்தனாங் கொல்லி காவலன்கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்* என்றதைச் சிந்திக்கும்போது நெஞ்சு குளிர்கின்றது. நமக்கு பகவத்பக்தியுமில்லை, பாகவதபக்தியுமில்லை. ஆனால் இந்தத் திருமொழியைச் சிந்தனை செய்யும்போது சுக்கான் பரல்போன்ற நெஞ்சும் பதஞ்செய் கின்றது. திருவாய்மொழியில் *பயிலுஞ்சுடரொளி, நெடுமாற்கடிமைப் பதிகங்களும், பெரிய திருமொழியில் *நண்ணாதவாளவுணர், கண்சோரவெங்குருதிப் பதிகங்களும் [பாகவதப்ரபாவபரங்கள்] இருந்தாலும் இத்திருமொழியின் சுவை தனிச்சிறப்புற்றதேயாம்.

இனி மூன்றாவது பதிகம் மெய்யில்வாழ்க்கை. எம்பெருமான்திறத்து பக்தி கொள்ளுகைக்கு மேற்பட்டது அவனடியார்திறத்து பக்திகொள்ளுகை. இதற்கும் மேற்பட்டதொரு நிலைமையுண்டு; அதாவது, இத்தகைய பகவத்பாகவத பக்தியில்லாத ஸம்ஸாரிகளைக்கண்டால் மிக்க அருவருப்பு உண்டாகி, அவர்கள் நின்றவிடத்தில் நிற்பதும் அஸஹ்யமாகும் நிலைமை. இந்த நிலைமையுண்டானாலல்லது பகவத்ப்ராவண்யமும் பாகவத ப்ராவண்யமும் நிலைத்திராது. ஸம்ஸாரிகளைக் கண்டால் நமக்கு வெறுப்பும், நம்மைக் கண்டால் அவர்களுக்கு வெறுப்புமான நிலைமை விளைந்து அரும்பெருந் தவப்பயனாகும். ஸ்ரீ விபீஷணாழ்வான் இராவணனைவிட்டு விலகினதற்கு முக்கிய காரணம்— தன்னுபதேசத்தை அவன் ஆதரிக்கவில்லையென்பதன்று; *த்வாம் து திக் குலபாம்ஸநம்* என்று அவன் வெறுத்துத்தள்ளினதுண்டே அதுதான் முக்கியமான காரணம். திருமங்கை யாழ்வார் திருநறையூர்ப் பெருமாளை நோக்கி "பித்தாவென்று பேசுகின்றார் பிறரென்னை" என்றார்; [ஸம்ஸாரிகள் என்னைப் பேயனென்று ஏசுகிறார்களென்றபடி.] இதைக் கேட்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! எதற்காக உம்மைப் பேயனென்று பிறர் ஏசுகின்றார்கள்? சொல்லும்' என்ன, *அத்தா அரியே! என்று உன்னையழைக்க* = உன்பக்கல் எனக்குண்

டான ப்ராவண்யமேயடியாக ஏசுகின்றார்கள் என்றாராழ்வார்; அதுகேட்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! அப்படியாகில் என்பக்கலில் ப்ராவண்யத்தைவிட்டுத் தொலையுமே' என்றான். அதற்கு ஆழ்வார் கூறின மறுமாற்றம்—*முத்தேமணிமாணிக்கமே முளைக்கின்றவித்தே! உன்னை யெங்ஙனம் நான் விடுகேனே* என்று. இதனுடைய உட்கருத்து—பிரானே! அப்பாவிகளின் ஏசுதல் எனக்குப் பரமப்ராப்யமன்றோ; உன்னை விட்டேனாகில் பெறாப் பேறானவந்த ஏச்சு அரிதாகியொழியுமே. ஆகவே உன்னைவிடமாட்டேன் என்பதாம். எம்பெருமான் நம்மைக் கைப்பற்றுவதிற்காட்டிலும் பாவிகளான பிறர் நம்மைக் கைவிடுவதுண்டே இதுதான் உண்மையான பக்தர்களுக்குப் பரமோத்தேச்யம். *மனக் குற்றமாந்தர் பழிக்கில்புகழ்* என்றுபணித்த அமுதனாருடைய திருவுள்ளமுமிதுவே. ப்ரக்ருதம் இத்திருமொழியில் *பேயரேயெனக்கு யாவரும், யானுமோர் பேயனே யெவர்க்கும்* (8) என்றபாட்டில் இக்கருத்தை உய்த்துணருக.

இனி நான்காவது பதிகம். ஊனேறுசெல்வம். *கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்* என்றும் *ராஜாநம் குலசேகரம்* என்றும் சக்ரவர்த்தியாகச் சிறந்த பிறவிபெற்ற விவ்வாழ்வார் *வானாளுஞ்செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்* என்று உபயவிபூதிச் செல்வத்தையும் வெறுத்து *செம்பவளவாயான் திருவேங்கட மென்னும் எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனுமாவேனே* என்று திருவேங்கட மலையோடு ஸம்பந்தமுடைய திர்யக்ஸ்தாவரஜன்மங்களில் ஏதேனுமொன்றாகப் பெறுவே னாகவேணுமென்று இத்திருமொழி முழுவதனாலும் அருளிச்செய்திருப்பது ஜன்மோத் கர்ஷாபகர்ஷ விஷயத்தில் சிறந்த சாஸ்த்ரார்த்தத்தைத் தெளிவிப்பதாகும். இத்திருமொழி யினுள்ளே புகுந்து சிறிது ரஸாநுபவம் செய்யக் குதுகலிக்கின்றேன்.

1. முதற்பாட்டில் *உடற்பிறவி யான்வேண்டேன்* என்று பிறவியை இகழ்ந்தவர்தாமே *குருகாய்ப்பிறப்பேனே* என்று பிறவியையே விரும்பினமையால், வேங்கடத்துக் கோனேரியில் பிறப்பது பிறப்பன்று, அது விரஜாநதியைச் சார்ந்து வைகுண்டத்தில் அப்ராக்ருதசரீரம்பூண்டு வாழ்வதோடொக்குமென்று ஆழ்வார் திருவுள்ளம்பற்றினரென்பது தெற்றென விளங்கும். [குருகாய்ப்பிறப்பேனே.] நாரை கொக்கு குருகு இவை ஒரே ஜாதி. நம்மாழ்வார் திருவாய்மொழியில் தூதுவிடும் பதிகங் களில் *அஞ்சிறையமடநாராய்* *வைகல்பூங்கழிவாய்வந்துமேயுங் குருகினங்காள்* *எங்கானலகங்கழிவாய் இரைதேர்ந்து இங்கினிதமரும் செங்காலமடநாராய்!* என்று முந்துறமுன்னம் தூதுபோக விளித்தது இதனையேயாதலால் *குருகாய்ப் பிறப்பேனே* என்று குருகான பிறவியிலே முதன்முன்னம் விருப்பங்காட்டினராழ்வார்.

2. [திருவேங்கடச்சுனையில் மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே.] கீழ்ப் பாட்டில் 'குருகாய்ப்பிறப்பேனே' என்றவர் அப்பிறவியில் ஓர் குறை தோன்றி மீனம் பிறவியை வேண்டுகின்றாரிப்பாட்டில். குருகுக்கு இறகுகள் உண்டாகையாலே அது திருமலையைவிட்டுப் பறந்து வேற்றிடத்திற்குச் சென்றிடவுங்கூடும். திருமலையில் வாழவேணுமென்னுமாசை தமக்கு இப்போதிருப்பினும் குருகாய்ப் பிறந்தபோதும் இருக்குமென்ன முடியாததலால் அப்பிறவியில் குறை தோன்றிற்றென்க. மீனாய்ப் பிறந்தால் இடம்விட்டுப் பெயரமுடியாதன்றோ. 'குருகாய்ப்பிறப்பேனே' என்றதையும்

'மீனாய்ப்பிறப்பேனே' என்றதையும் சேர்த்து நோக்குமிடத்து, மத்ஸ்யபக்ஷகமான குருகாய்ப்பிறத்தலோடு, அதற்கு இரையாகின்ற மீனாய்ப்பிறத்தலோடு இவர்க்கு வாசியில்லை—திருமலையில் ஏதேனுமொரு பிறப்பை விரும்புபவராதலால் என்பது விளங்கும். எம்பெருமான் திருவுள்ளமுகந்துகொண்ட பல அவதாரங்களுள் முதலவதாரமாயிருத்தலும், நீர்மையுள்ளவிடத்தே செழித்து வளர்தலும், ஆதாரமான இடத்தைவிட்டுப் பிரிந்தால் உயிர்தரியாமையும் முதலியன மீனினிடமுள்ள குணவிசேஷங்கள். *குருகாய்ப் பிறப்பேனே* என்றதுபோல் *மீனாய்ப்பிறப்பேனே* என்னாமல் *பிறக்கும் விதியுடையேனாவேனே* என்றது—இப்பொழுதே அங்கு யான் மீனாய்ப் பிறந்திடாவிடினும் என்றைக்கேனும் ஏதேனுமொரு நல்வினையால் அங்கு எனக்கு நேருமென்னும் நிச்சயமுண்டானாலும் போதுமென்ற கருத்தைக் காட்டும்.

3. [வேங்கடக்கோன்தான்உமிழும் பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேனாவேனே.] கீழ்ப்பாட்டில் விரும்பிய மீன் பிறவியிலும் ஒரு குறை தோன்றிற்று: நீரைவிட்டுப் பிரிந்தால் உயிர் தரித்திருக்கமாட்டாதது மீன் பிறவி; சுனைவற்றிப்போனால் மீனுக்கு ஸத்தையில்லையாம்: ஆகவே அப்பிறவியும் வேண்டாவென்று தோன்றி, திருமலையப்பனுக்கு அந்தரங்ககிங்கரனாய் அவன் வாய்நீர் உமிழும் பொற்காளாஞ்சியை ஏந்திக்கொண்டு ஒருவராலும் தகையவொண்ணாதபடி துணிந்து விரைந்து உள்ளே புகுமவனும் பிறவி வாய்க்கவேணுமென்று அபேக்ஷிக்கிறார்.

4. [வேங்கடத்துச் செண்பகமாய் நிற்குந்திருவுடையேனாவேனே.] கீழ்ப்பாட்டில் விரும்பிய பொன்வட்டில் பிடிக்கும் கிங்கரனான பிறவியிலும் ஒரு குறை தோன்றிற்று; ஒரு கைங்கர்ய பரனானவளவில் அறிந்தறியாதும் நிகழ்கின்ற குற்றங்காரணமாகக் கோவிலதிகாரிகள் சினங்கொண்டு 'இன்ன குற்றத்திற்காக உன்னைக் கைங்கரியத்தினின்றும் விலக்கிவிட்டோம்' என்று கடிந்து விலக்கக்கூடும்; பொன்வட்டிலைக் களவுசெய்ய ஆசை தோன்றி ராஜதண்டனைக்கு உட்பட நேர்ந்தாலும் நேரும்' என்று தோன்றிற்று. அதனால் அப்பிறவியாசையைவிட்டு, அத்தகைய குற்றத்திற்கு இடமற்ற ஒரு ஸ்தாவரப்பிறவியை விரும்புகிறார். *வானவர் வானவர்கோனொடுஞ் சிந்துபூமகிழுந் திருவேங்கடம்* என்றபடி பரமபதத்திலுள்ளார் புஷ்பவர்ஷம் வர்ஷிக்குமிடமாதல்பற்றிப் புஷ்பமண்டபமெனப்படுகின்ற திருமலையிலே அப்பனுக்குப் புஷ்பகைங்கரியஞ்செய்வது விசேஷமாதலால் அக்கைங்கரியத்திற்கு உபயோகப்படுவதொரு பூமரமாக இருக்க வேண்டினாராயிற்று.

5. [எழில் வேங்கட மலைமேல் தம்பகமாய்நிற்குந் தவமுடையேனாவேனே.] கீழ்ப்பாட்டில் சண்பகப்பிறவியை விரும்பிய ஆழ்வார்க்கு புராணகதையொன்று நினைவுக்கு வந்தது: "கற்பகக் காவு கருதிய காதலிக்கு, இப்பொழுது ஈவனென்று இந்திரன் காவினில், நிற்பனசெய்து நிலாத்திகழ்முற்றத்துள் உய்த்தவன்* என்றும் *மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய் வண்துவரை நட்டான்* என்றும் ஆழ்வார்களருளிச்செய்கிறபடியே ஸத்யபாமைப் பிராட்டிக்காக தேவேந்திரனது சோலையினின்று கற்பகத்தரு பெயர்த்துக்கொண்டு போகப்பட்ட கதை: அங்ஙனம் யாரேனும் மஹாப்ரபுக்கள் திருமலைக்குவந்து சண்பகமரத்தின் சிறப்பைநோக்கி தேவஸ்தானத்தில் நிதிக்குவை

செலுத்திப் பெயர்த்துக்கொண்டு செல்லக்கூடுமோ! என்று சங்கித்து அப்பிறவியை இகந்து, இலை காய் கனி நிழல் ஒன்றுக்கு முதவாததொரு மலட்டுமரமாய்ப் பிறக்கும் பிறவியை விரும்புகிறாராயிற்று. தம்பகம்—வீணே தோன்றி வளர்ந்து அங்கே தீந்து போவதொரு புதருமாம்.

6. [*வேங்கடத்துள் அன்னனைய பொற் குவடாம் அருந்தவத்தனாவேனே.*] கீழ்ப்பாட்டில்—திருமலையில் தம்பகமாய் நிற்க ஆசைப்பட்ட ஆழ்வார் அப்பிறவியிலும் குறை கண்டார்; அரசாங்கத்தார் மலையிலுள்ள செடிசெட்டுகளை அடிக்கடி சோதிப்பவர்களாதலால் சிடுரென்று அவர்கள் தம்பகத்தைக் களைந்தெறிந்திடக்கூடுமெனவும், அது தானே விரைவில் தீந்தொழியக்கூடுமெனவும் சிந்தித்தார்; அக்குறைக்கு இடமில்லாமே அத்திருமலையில் ஒரு பெரிய பாறையாக இருக்கப்பெறவேணுமென்று விரும்பினபடி.

7. [*திருவேங்கடமலைமேல் கானாறாய்ப்பாயுங் கருத்துடையேனாவேனே.*] கீழ்ப்பாட்டில், திருமலையில் ஒரு பெரும் பாறையாகவிருக்க விரும்பியதிலும் ஒரு குறை தோன்றிற்று; நூதன ஆலயங்களில் மூலபிம்பம் அமைக்கப் பெரும் பாறையைத் தேடி வருமவர்கள் இதைக்கொண்டு ஒரு பௌத்த விக்ரஹமடித்துப் போட்டால் என்செய்வதென்று சிந்தித்தார். அப்படி உடைத்துக்கொண்டு போவதற்கு இடமறும்படி திருமலையில் கானாறாய்ப் பெருகவேணுமென்று பாரிக்கிறாரிதில்.

8. [*திருவேங்கடமலைமேல் நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேனாவேனே.*] கீழ்ப்பாட்டில் கோலின கானாறும்பிறப்பிலும் ஒரு குறையுணர்ந்தார்; கானாறு எப்போதும் பெருகக்கூடியதன்றே; சில காலங்களில் வற்றிப்போமே; அப்போது திருமலையில் வாழ்ச்சி இழந்ததாமே என நினைத்தார். அங்ஙனமன்றி எப்போதும் ஒரு தன்மைத்தாகத் திருவேங்கடமுடையானை ஸேவிக்க வருகின்ற பாகவதர்களின் ஸ்ரீ பாததூளிபடும்படி வழியாயிருக்கப் பெறவேணுமென்று பாரிக்கிறாரிதில்.

9. [*படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேனே.*] வழியாய்க் கிடப்பதிலும் ஒரு குறை தோன்றிற்று. திருமலைக்குப் பல வழிகளுண்டு. சந்திரகிரிவழி அணித்தென்று அவ்வழியே போகக்கூடும். இப்போது வேறுவழியும் ஏற்பட்டுவிட்டதே. மேலும் வழியென்பது விலகிநிற்பதாதலாலும் அதையும்விட்டு, திருமலையப்பனுடைய திருவருள் நோக்கம் பதியுமாறு அவனதுகண்முகப்பிலே படியாயிருந்து, அதில் சைதன்யமும் குடிபுகுந்து பவளவாய்காணப் பெறுவேனாக வேணுமென்று பாரிக்கிறாரிதில்.

10. [எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே.] நாம் கருங்கற்படியாய்க்கிடந்தால் திருவேங்கடமுடையானுடைய செல்வச் சிறப்புக்கு ஏற்ப அதன்மேல் ஸுவர்ணகவச ஆவரணமேற்பட்டால் படியாகியும் பயனில்லையாமென்று கருதி, 'நானுமறியாமே அவன்றானுமறியாமே திருமலையில் ஏதேனுமொரு பிறப்பாகுக' என்று சாதுரியமாகப் பேசிப் பதிகத்தைத் தலைக்கட்டினாராயிற்று. ... ... ❁

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# கீதாபாஷ்யம்.

(ஸ்ரீமதுபயவே. நியாயவேதாந்த வித்வான். தீ. அ. அக்காரக்கனி.
ஸம்பத்குமாராசார்யஸ்வாமி, M.A.)

[1—3—1969 சனிக்கிழமை மாலை திருவல்லிக்கேணி ஸ்ரீ வேதவேதாந்த வர்த்தினி ஸபையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஸ்ரீ வானமாமலை மடத்தில் நடத்திய சொற்பொழிவின் சுருக்கம்.]

நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸாதித்தருளின க்ரந்தங்களில் மூன்று முக்கியமானவை. அவையாவன—ஸ்ரீ பாஷ்யம், கீதாபாஷ்யம், சரணாகதிகத்யம். இவைகளில் வேதாந்தார்த்தங்களை நிஷ்கர்ஷித்து ஸித்தாந்த ஸ்தாபனம் செய்வதற்காகவே ஸ்ரீ பாஷ்யம் ஸாதிக்கலானார்.

ஸாக்ஷாத் எம்பெருமான் திருவாக்காலே திருவவதரித்த பகவத்கீதையின் உண்மையான ரஸகனமான பொருள்களை விளக்கிக் காட்டுவதற்கென்று ஸ்வாமி கீதாபாஷ்யம் ஸாதித்தார். இவ்விரண்டும் வியாக்கியான க்ரந்தங்களாகையால் மூலத்தையொட்டியே பொருளுரைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது; இதனால் ஸ்வாமி தம் திருவுள்ளத்தில் ஓடும் கருத்துக்களை முழு அளவுக்கு வெளியிட அவகாசமில்லாமற் போயிற்று. ஆகையால் இதற்குப் பாங்காக சரணாகதிகத்யம் ஸாதித்தருளினார்.

நமது ஆழ்வார்களும் ஆசாரியர்களும் விசேஷமாக ஆதரித்துப் போந்த பற்பல விசேஷ அர்த்தங்களை விளக்க ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்வாமிக்கு அடியோடு அவகாசம் கிடைக்கவில்லை. ஏனென்றால் ப்ரஹ்மஸூத்ரகாரர் அவ்விஷயங்களைப் பேசவில்லையாதலால். ஸூத்ராக்ஷரத்துக்கு அனுகுணமாகவே பாஷ்யம் இயற்றுவதாக ப்ரதிஜ்ஞை செய்த ஸ்வாமி அவ்விஷயங்களை உத்ஸூத்ரமாக விவரிக்கத் திருவுள்ளம் பற்றவுமில்லை. ஆகையால் இவ்விஷயங்களை ஒருவாறு ஸூசிப்பித்தாரேயன்றி, வேண்டிய அளவுக்கு விவரித்தருளவில்லை. பகவத்கீதையிலோவென்றால், இவ்வர்த்தங்கள் பெரும்பாலும் ஸ்பஷ்டமாகவும். சில ஸூசனையாகவும் பேசப்பட்டதால், இதில் ஸ்வாமி தம் திருவுள்ளத்திற்குப் பாங்காக அர்த்தங்களை விவரிக்க அவகாசமேற்பட்டுள்ளது.

ப்ரஹ்மஸூத்ரமானது வாதக்ரந்தமாக அவதரித்தது. அதை வியாக்கியானிக்கும் போது தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸா முதலிய சாஸ்திரங்களின் விசாரமும் பண்ண வேண்டியதானபடியால் அதின் வியாக்கியானம் சுஷ்கவேதாந்த க்ரந்தமாய் நின்றுவிட்டது. அதில் பகவதனுபவத்திற்கு விசேஷமான வாய்ப்பு கிடைக்கவில்லை. பகவத்கீதை அப்படியில்லாமல் அனுபவசாஸ்திரமாகவுங் கொள்ளமுடிந்தபடியால் இதன் பாஷ்யம் அனுபவ க்ரந்தமாகவமைந்தது. அதாவது ஸ்வாமி, இதில் பேசப்பட்ட பகவத் ஸ்வரூபரூபகுண சேஷ்டிதாதிகளைத் தாம் அனுபவித்து ரஸித்து எழுத அவகாசம் பெற்றார். இதற்கும் மேற்பட சரணாகதிகத்யம் முழு அனுபவ க்ரந்தமாக வாய்த்தது அதன் தனிப் பெருமையாகும்.

அனுபவக்ரந்தமானாலும் கீதாபாஷ்யத்தில் சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷத்துக்கும் குறைவில்லை. திருவாய்மொழியைப்போல இதுவும் அனுபவமும் சாஸ்த்ரசர்ச்சையும் கலந்த பரமவிலக்ஷணக்ரந்தமாய் அமைந்தது. ஆனால், பதின்மூன்றுவது அத்யாயத்தில் தத்வத்ரய நிரூபணப்ரகரணம் தவிர மற்றவிடங்களில் சாஸ்த்ரார்த்தம் சர்ச்சிக்கப்பட்டதென்றே தெரியாமல் மிகவும் போக்யமான வழியிலேயே அர்த்தங்கள் தெரிவிக்கப்பட்டிருப்பது இந்த பாஷ்யத்தின் தனிப்பெருமை.

பகவத்கீதை மிகவும் லலிதமான சப்தங்களால் தொடுக்கப்பட்டு, காதாரக்கேட்ட மாத்திரத்தால் அர்ப்பஜ்ஞர்களுக்கும் அர்த்தம் புரிந்துவிடுமென்று நினைக்கலாம்போலிருக்கிறது. ஆனால் அதில் யாராவது ஏதாவது சிறு கேள்வியைக் கேட்டுவிட்டால், ஸமஞ்ஜஸமாக பதில் சொல்ல முடியாமல், யாராயிலும் திணறவேண்டியிருக்கும். உதாஹரணமாக *கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யஞ்ச விகர்மண:, அகர்மணச்ச போத்தவ்யம் கஹநா கர்மணோ கதி:* என்கிற (4-17) ச்லோகம் மேலெழுந்து பார்ப்பவர்களுக்கு மிகவும் எளிதாகவே தோன்றும். ஆனால் கர்ம, விகர்ம, அகர்ம என்கிற மூன்று பதங்களுக்கு என்ன அர்த்தம் என்று கேட்டுவிட்டாலோ, எப்பெயர் பெற்ற வித்வானும் சொல்ல முடியாமல் திணறவேண்டியதுதான். கர்ம, அகர்ம என்று இரண்டு சொற்களே இருந்தாலாவது நல்ல கர்ம, கெட்ட கர்ம என்று சொல்லித் தொலைக்கலாம். அதுவும் ப்ரகரணத்துக்குச் சேராதே என்று கேட்டால் பதில் சொல்லமுடியாதென்பது வேறு விஷயம். இங்கு ஸ்வாமி பாஷ்யத்தின் விளக்கம் அத்யத்புதமானது.

ப்ரஹ்மஸூத்ரத்தில் கிடைக்காமல் கீதாபாஷ்யத்தில் ஸுஷ்பஷ்டமான சில முக்கிய அர்த்தங்களை இனிக் காட்டுவோம். எந்த வஸ்துவை விளக்கிக் காட்டுவதற்கென்று ப்ரஹ்மஸூத்ரம் இயற்றப்பட்டதோ, அந்த பரம்பொருளை அந்த நூலானது ப்ரஹ்மம், ப்ரஹ்மம் என்று சொல்லித் தீர்த்ததேயன்றி அதன் பெயரை ஸ்பஷ்டமாகப் பேசவில்லை. இதன் பயனாகப் பல பாஷ்யகாரர்கள் நிர்குணம், நிர்விசேஷம் என்றெல்லாம் சொல்லக் கூடிய ஏதோவொரு வஸ்துதான் அந்த ப்ரஹ்மம் என்றிப்படி வாதாட வாரம்பித்தார்கள். இந்த வாதம் இன்னமும் ஓய்ந்தபாடில்லை. பகவத்கீதையில் இந்தக் கஷ்டமில்லை. கண்ணனாய் அவதரித்த ஸ்ரீமந் நாராயணன் 'நானே பரதெய்வம்' என்று பலகாலும் சொல்லியிருப்பதால் பரதேவதா நிஷ்கர்ஷம் பண்ணுவதில் யாதொரு க்லேசமும் ஏற்படவில்லை.

எம்பெருமான் அவதாரங்கள் செய்தருளுகிறான் என்கிறவர்த்தத்தை ஸூத்ரகாரர் பேசவே இல்லை. கீதையிலோவென்னில், அவதாராத்யாயம் என்று சொல்லப்படும் ஒரு அத்யாயத்தில் இவ்விஷயம் பரக்கப் பேசப்பட்டது. இவ்விடத்தில் ஸ்வாமி பாஷ்யகாரரும் பற்பல மஹார்த்தங்களை வெளியிட்டிருக்கிறார்.

'அஜ்ஞானத்தால் ஸம்ஸாரம், ஜ்ஞானத்தால் மோக்ஷம்' என்று எல்லா மதத்தினரும் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த ஜ்ஞானமாவது எப்படிப்பட்டதென்பதை ஸூத்ரகாரர் தெளிவுபடுத்தவேயில்லை. இதன் பயனாக, சில பாஷ்யகாரர்கள், ப்ரஹ்மமென்று ஒரு வஸ்து உளது என்று அறிந்தால் போதும், மோக்ஷம் கிடைத்துவிடும், அல்லது இங்கேயே இப்பொழுதே கிடைத்துவிட்டது என்று வாதம் செய்யலானார்கள். ஸ்ரீ பாஷ்யகாரரும் சில நியாயங்களையும் ஆவ்ருத்த்யதிகரணத்தின் ப்ரமேயத்தையும் காட்டி என்னெயின்

தாரைபோல் துண்டுவிழாத ஜ்ஞானத்தின் தாரைதான் மோக்ஷோபாயமான ப்ரஹ்மஜ்ஞானமென்னப்படும் என்று சிறிது சிரமப்பட்டு ஸ்தாபிக்கலானார். அதாவது இடைவிடாது என்றால் வேறிடத்தில் சிறிதும் செல்லாமல் எப்பொழுதும் செய்யப்படும் பகவானின் த்யானம்தான் சாஸ்திரங்கள் கூறும் ப்ரஹ்மஜ்ஞானமாகும் என்று விவரித்தருளினார். ஆனால் இதுவும் போதவில்லை. ராமபாணத்தின் சுவையை இரண்டுதடவை உண்ட மாரீசன் பிறகு பயத்தால் எப்பொழுதும் இராமனையே தியானிப்பதாகவும், எங்கெங்கும் அவனையே காண்பதாகவும் பேசியிருக்கிறான். இதனால் அவனை ப்ரஹ்மஜ்ஞானியென்றோ, உபாஸகனென்றோ சொல்லிவிடலாமா? என்று கேட்டால் அதற்கு விடை ஸூத்ரத்தில் கிடைக்காது. ஸ்வாமிமட்டும் சில வேதவாக்குக்களை உதாஹரித்து 'ப்ரேமத்துடன் செய்யும் த்யானம்தான் உபாஸநமெனப்படும்' என்று விளக்கினார். ஆராய்ந்துபார்த்தால் இதுவும் போதாது. பகவான் நமக்கு ஸ்வாமி, நாம் அவனுக்குச் சேஷப்பட்டவர்கள் என்கிற ஜ்ஞானமும் கூடவிருக்கத்தான் வேண்டும். இப்படி எல்லா அம்சங்களுடன் கூடிய ஜ்ஞானத்திற்குத்தான் பக்தியென்று பெயர். ஆக பக்திதான் மோக்ஷஸாதநமென்று முடிந்தது. ஆனால் பக்தி சப்தத்தை ஸ்ரீ பாஷ்யத்தில் பலவிடங்களில் ப்ரயோகித்தும் பாஷ்யகாரர் அதை இவ்வளவு விவரிக்கவில்லை; மூலம் இடம் தராதபடியால். கீதாபாஷ்யத்திலோவென்றால் "மந்மநாபவ மத்பக்த: மத்யாஜீ மாம் நமஸ்குரு" என்கிற சுலோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி இவ்வர்த்தத்தை அத்யத்புதமாக விவரித்தருளுகிறார். எங்ஙனேயென்னில்.

இங்கு [மந்மநா பவ] என்பதுதான் முக்கியமான விதேயம். என்னிடம் (பகவானிடம்) மனதை வை. அதாவது என்னையே இடைவிடாமல் த்யாநம் செய். [மத்பக்த:]—என்பதை மத்பக்த: மந்மநா பவ என்று கூட்டிக்கொள்ளவேணும். என்னிடத்தில் அன்பு செலுத்திக்கொண்டே த்யாநம் செய். அதாவது, மாரீசனைப்போல் அன்பில்லாமல் த்யாநம் செய்யாதே. [மத்யாஜீ மத்பக்த: மந்மநா பவ]—என்னை பரிபூர்ணமாக ஆராதிக்குமளவுக்கு முதிர்ந்த அன்புடையவனாய்க்கொண்டு என்னை த்யாநம் செய். அதாவது என்னை த்யாநம் செய்வதால் உண்டான ப்ரீதியானது மிகவும் வளர்ந்து அதனால் தூண்டப்பட்டு என்னை பரிபூர்ணமாக ஆராதிப்பாயாக. கத்யத்தில் ஸ்வாமி "அநுபவ ஜநித அநவதிகாதிசய ப்ரீதி காரித அசேஷாவஸ்தோசித அசேஷ சேஷதைகரதி" என்கிற சப்தத்தை அடிக்கடி ப்ரயோகித்தருளுகிறார். இதன் கருத்தாவது—எம்பெருமானை அநுபவித்ததனால் அளவுகடந்த ப்ரீதியுண்டாகவேணும். அந்த ப்ரீதியானது வளரவளர ஏதாவது கைங்கர்யத்தில் மூட்டும். அதாவது கைங்கர்யம் செய்தாலல்லது தரிக்காத நிலைமையுண்டாகவேணும். இந்த நிலைமையில் சில ஸமயம் உடலும் மனமும் தளர்ந்துபோய் உண்மையில் ஒருவிதமான கைங்கர்யமும் செய்யமுடியாமற் போய்விடலாம். ஆனால் எதையாவது செய்யவேணும், செய்யவேணும் என்கிற பாரிப்பு மட்டும் ஓங்கி வளரும். இந்த பாரிப்பே கைங்கர்யமாகும். இக்கருத்தையே இந்த கீதாச்லோக பாஷ்யத்தில் ஸ்வாமி காட்டுகிறார். அல்லது கீதாசார்யனே ஸ்வாமிக்கு இவ்விடத்தில் இவ்வர்த்தத்தைக் காட்டினான். ஆக த்யாநமென்றால், இப்படி கைங்கர்யம் செய்யவேணுமென்கிற பாரிப்பையுண்டாக்கும்படி முதிர்ந்த ப்ரீதியுடன் செய்யப்படவேண்டுமென்றதாயிற்று. இனி (மாம் நமஸ்குரு) என்பதுக்கு இலேசாக என்னை வணங்கு என்று பொருள் கூறி ஸ்வாமி நின்றுவிடவில்லை. பின்னையோவென்னில், கீழே விவரித்த மூன்று

சொற்களையும் இத்துடன் ஏகவாக்யமாகக் கூட்டி, கைங்கர்யத்தின் முதிர்ந்த தசையான ஆத்மஸமர்ப்பணத்தையே இச்சொல் காட்டும். அதாவது, முன் கூறியபடி ப்ரீதியால் தூண்டப்பட்டு பலவிதமான தொண்டு செய்தும், மனதில் பர்யாப்தி பெறுமல், இன்னமும் என்ன செய்வேன், என்ன செய்வேன்? என்று ஸம்ப்ரமித்து கடைசியாக தன்னையே பகவானுக்கு அர்ப்பித்துவிடவேண்டும். இதை ஸ்ரீவைகுண்டகத்யத்தின் முடிவிலும், "ப்ரணம்ய ஆத்மாநம் பகவதே நிவேதயேத்" என்று ஸ்வாமி தாமே ஸாதித்தருளினர். ஆக இப்படிப்பட்ட அவஸ்தைகளையடைந்த ப்ரீதியுடன் என்னையே எப்பொழுதும் த்யாநம் செய் என்று கண்ணபிரான் அர்ஜுனனுக்கு பக்தியின்படியை விவரித்தானென்று ஸ்வாமி பாஷ்யத்தில் காட்டியருளினராயிற்று அவ்வளவு அர்த்தமும் பகவத்கீதைக்கு ஏறிட்டுச் சொன்னதன்று; ஸ்வரஸமாகவே கிடைக்கக்கூடியது. ஆனால் ஸ்வாமி பாஷ்யம் ஸேவிக்காமல் ஒருவருக்கு இது தோன்றக்கூடியதல்ல. ஸூத்ரத்தில் இவ்வளவு விசதமான அர்த்தத்திற்கு இடம் தரவல்ல சப்தம் கிடைக்காது.

இதற்குமேல், நமது ஸித்தாந்தத்தில் அடிப்படையாகக்கொண்ட ப்ரபத்தியென்கிற சரணகதிக்கு வாசகமானதோ, ஸூசகமானதோ ஒரு சிறிய சப்தம்கூட ஸூத்ரத்தில் காணக்கிடைக்காமையால் ஸ்ரீ பாஷ்யத்தில் அதில் சர்ச்சைபண்ண முடியாமற்போயிற்று. ஆனால் கீதையில் இவ்வர்த்தம் ஸுஸ்பஷ்டமாயிருக்கிறது, ஆரம்பத்தில் அர்ஜுனன் 'சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்' என்று சரணகதி செய்தான். கீதாசாரியனும் பலவிடங்களிலும் 'மாமேவ யே ப்ரபத்யந்தே', 'தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்ய', 'தமேவ சரணம் கச்ச', 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்றான். இதனால் சரணகதியின் பெருமையை விளக்க ஸ்வாமிக்கும் அவகாசம் ஏற்பட்டது.

ஆசார்யன் பெருமையையும், 'தத் வித்தி .. . உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிந: தத்வதர்சிந:' என்று கீதாசார்யன் காட்டியிருக்கிறான். அன்றியும், அவதாரகாலத்தையறிவிக்கும் ச்லோகத்தில் 'ததா ஆத்மாநம் ஸ்ருஜாமி அஹம்' என்பதற்கு, நான் அவதரிக்கிறேன் என்கிற பொருள் கூறி எனக்கு ஆத்மாவான ஜ்ஞானியையும் அவதரிப்பிக்கின்றேன் என்றும் பொருள் கூறுவதுண்டாகையால் ஆசார்யன் பெருமை விளக்கப்பட்டதாயிற்று.

எம்பெருமான் சேதனர்களைத் திருத்தி யாட்கொள்ளுவதற்கென்றே ஜகத்தையுண்டாக்கி சாஸ்த்ரங்களை யுபதேசித்து, அவதாரம்செய்து மற்றும் பற்பல காரியங்களையும் சோம்பாமல் செய்துவருகிறனென்று நமது ஆசாரியர்கள் அடிக்கடி சொல்லிவருகிறார்கள். இதெல்லாம் ஒன்றுவிடாமல் கீதையில் பேசப்பட்டிருக்கின்றது. அதைச் சிறிது விவரிப்போம். 'தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம்', 'அஹம் பீஜப்ரத: பிதா' என்று ஸ்ருஷ்டி பேசப்பட்டது. 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம் அபோஹநம் ச' என்றும் 'ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந திஷ்டதி' என்றும் எம்பெருமான் ஒவ்வொருவருடைய இதயத்திலும் வீற்றிருந்து அவர்களுக்கு யதோசிதமாக ஜ்ஞாநம், அஜ்ஞாநம், மறைவு முதலியவற்றைத் தானேயுண்டுபண்ணுவதாகச் சொன்னான். இதனால் சிலருக்குண்டாக்கும் பகவத்-ஜ்ஞாநமும் அவன் தந்த பரிசு என்பது ஸித்தம். 'ததாமி புத்தியோகம்' என்பதால் அந்த ஜ்ஞானத்தின் பரிபாகமான பக்தியையும் அவனே தருகிறான் என்றது. இதற்கு விரோதியான

அஜ்ஞானத்தை அவனே போக்கியருள்வானென்பது, 'அஹமஜ்ஞானஜம் தம:, நாசயாமி' என்று சொல்லப்பட்டது. இதற்குவேண்டிய போஷணமும் தானே செய்வதாகச் சொன்னவிடம்—'யோகக்ஷேமம் வஹாம்யஹம்' என்பது. இவ்வளவுதூரம் சென்ற பிறகும் ஸம்ஸார விமோசநம் செய்விக்கவேண்டியவன் அவனே யென்றது 'தேஷமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்ய ஸம்ஸாரஸாகராத்' என்று பேசப்பட்டது. கடைசியாக, 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:' என்று தலைக்கட்டினராயிற்று. ஆக இவ்வளவு விசேஷ அர்த்தங்களையும் கீதாசார்யன் காட்டியருளினதைக்கொண்டே நமது ஆசார்யர்கள் ஸாரார்த்தங்களை நிஷ்கர்ஷித்தருளினார்கள்—என்றறியவேண்டும் ஆகையால் எம்பெருமானாருக்கு பலபடிகளாலும் கைகொடுத்ததும் அவர் திருவுள்ளத்திற்கும் பாங்காக பாஷ்யமிட்டருள அவகாசம் தந்ததுமான மஹாக்ரந்தமே பகவத்கீதையென்பது.

பகவத் கீதையின் அவதாரமே எம்பெருமானின் இந்த விசேஷ உபகாரத்துக்கு ஸூசகமென்பதை பாஷ்யகாரர் காட்டியருளுகிறார். கீதையின் முதல் அத்யாயத்திற்கு அர்ஜுந விஷாத யோகமென்று பெயர். யுத்தம் செய்யும் தருணத்தில் அர்ஜுனன் மனத்தில் ஏதோ ஒரு பந்து ஸ்நேஹமும், தயையும், வதபீதியும் ஏற்பட்டதாகவும் அதனால் அவன் மிகவும் வியாகுலப்பட்டு யுத்தம் செய்ய மனமில்லாதவனாய் கண்ணனைப் பார்த்து, "என் மதி கலங்கிவிட்டது: என்ன செய்வதென்றறியாமல் தவிக்கின்றேன். இப்பொழுது நீதான் எனக்கு வழி காட்டவேணும்" என்று வேண்ட, அவனை யுத்தத்தில் தூண்ட கீதோபதேசம் செய்தருளினனென்று இங்கு கூறப்பட்டுளது. ஆனால் இங்கு வலிதான சங்கையொன்று தோன்றக்கூடும். அதாவது "அர்ஜுனனை யுத்தத்தில் தூண்ட இவ்வளவு விஸ்தாரமான தத்வ சாஸ்திரம் உபதேசிக்கவேண்டிய அவசியமென்ன? அவனுக்கு ஸமயோசிதமான சில ராஜ நீதிகளைச் சொல்லியிருந்தால் போதாதா" என்று தோன்றும். இதற்கு நம் ஸ்வாமிதான் கீதாபாஷ்யத்தின் அவதாரிகையில் உண்மையாயும் தகுந்ததாயுமுள்ள ஸமாதானம் வெளியிட்டருளினார். எங்ஙனேயென்னில், "எம்பெருமான் லோகோத்தாரத்திற்காக அவதாரம் செய்து வருகிறானல்லவா? அதில் பெரியதொரு அத்யாத்ம சாஸ்திரத்தை உபதேசிக்க வேணுமென்கிற அவா அவனுக்குண்டாயிற்று. ஆனால் யாரும் அவனிடத்தில் உபதேசம் கேட்க வரவில்லை. கேட்காதவர்க்கு, (அதாவது) விருப்பமில்லாதவர்க்குச் செய்யும் உபதேசம் வீணாய்ப் போகும். ஆகையால் கண்ணன் தானே இச்சமயத்தில் அர்ஜுனன் மனத்தில் இப்படியொரு கலக்கத்தை யுண்டாக்கி அவன் தன்னைக் கேட்கும்படி செய்து அவனுக்கு உபதேசிப்பவன்போல, உலகிலுள்ள ஜிஜ்ஞாஸுக்களுக்காக பரந்த கீதா சாஸ்திரத்தை யுபதேசித்தான். ஆக அர்ஜுனனைத் தூண்டுவதென்பது வ்யாஜமாத்திரம்: உலகிற்கு நல்லறிவூட்டவேண்டுவதே எம்பெருமானின் முக்கியமான கருத்து—என்பதே ஸ்வாமி காட்டியருளும் நற்பொருள். அதிலும் சிஷ்யனைக் கடுமையாகப் பரீக்ஷித்து, பிறகு உபதேசிக்கும் சிலர்போலல்லாமல் கேட்ட மாத்திரத்தில் உபதேசித்த கீதாசார்யன் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யனே ஆவான்.

ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட உபாஸனத்தின் ஸ்வரூபத்தை நினைக்கும்பொழுதே நமது உடல் நடுங்குகிறது. இதை நாம் செய்ய முடியுமா என்கிற அச்சமே நம்மை வாட்டுகிறது. ஆனால் அது தன்னையே கீதாசார்யன் பேசும்பொழுது அது மிகவும்

இனிப்பாகத் தோன்றுகிறது. ஸூத்ரகாரர் உபதேசித்த உபாஸனத்தைத்தான் கீதையில் பஜ்ஜானா பரை என்கிற ச்லோகமும் உபதேசித்தது. ஆனால் இதில் ப்ரீதியை முன்னிட்டு பேசியபடியால் அன்பனை எம்பெருமானை த்யானிப்பதும், தொண்டு செய்வதும் இனிதாயிருக்குமென்றே நினைக்கும்படியிருக்கும். ஐந்தாவது அத்யாயத்தின் கடைசி ச்லோகமும், அதன் பாஷ்யமும் இவ்வர்த்தத்தை மிகவும் தெளிவுபடுத்துகின்றன— போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோக மஹேச்வரம். ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம்ருச்சதி. இவ்வத்யாயத்தில் கர்மயோகத்தின் ப்ரசம்ஸை நடந்து வந்தது. அதைக்கேட்ட அர்ஜுநன் மனத்தில், "இது ஸரி. ஆனால் எல்லா உறுப்புகளையும் அடக்கி ஒடுக்கி இந்த கர்மயோகம் செய்வது மிகவும் கஷ்டமாயிருக்குமே!" என்கிற அச்சமுண்டாயிற்று. அதைத் தீர்க்கவே இந்த ச்லோகம் அவதரித்தது. இதன் கருத்தாவது— அர்ஜுநா! நீ என்னையே எல்லா தபஸ்ஸு முதலிய கர்மாக்களால் ஆராதிக்கப்படுபவனாகவும் (அதாவது கர்மமென்பது என்னுடைய பூஜையென்றும்), நான் எல்லோருக்கும் ப்ரபுவென்றும் (அதாவது உனக்கு வகுத்த சேஷியென்றும்) இதற்குமேல் ஸர்வபூத ஸுஹ்ருதமென்றும் (உனது நண்பனென்றும்) பாவித்தாயானால், கர்மயோகம் செய்வதில் உனக்குப் பேரின்பமே உண்டாகும்; அதுவே ஸ்வயம் புருஷார்த்தமாகத் தோன்றும். இங்கு பாஷ்யகாரர் சுவைமிக்கதொரு வாக்யம் எழுதுகிறார்— ஸுஹ்ருத ஆராதநாய ஹி ஸர்வே ப்ரயதந்தே—என்று. நண்பனை ஆராதிக்கவேணுமென்று உலகில் ஒவ்வொருவரும் முயல்வர்களன்றோ? அதில் யாருக்காவது சிரமமோ, வெறுப்போ உண்டாவதுண்டோ? அதைப்போல நமக்கு வகுத்த சேஷியும், நண்பனும் நம்மீது அளவுகடந்த அன்பு செலுத்துபவனுமான எம்பெருமானை ஆராதிப்பதில் அருமை யென்ன? இவ்வாராதனைதான் கர்மயோகம்.

நமது ஸம்ப்ரதாயத்தில் மோக்ஷமாவது வைகுந்தம் சென்று எம்பெருமான் திறத்தில் நாம் செய்யும் நித்ய கைங்கர்யமேயென்று கூறப்பட்டது. இதை மற்றவர்கள், கைங்கர்யம் துக்கரூபமென்று சொல்லி தூஷிக்கிறார்கள். இதற்கும் ஸமாதானத்தை ஸ்வாமி இந்த வாக்யத்தால் காட்டியருளினாராயிற்று.

ஸ்வர்க்கம் முதலியதொரு சிறிய பலத்தை விரும்பி ஒரு யாகம் செய்வதானால் அது குறைவொன்றில்லாமல் ஒழுங்காக முடிவுபெறவேண்டும். அப்படியில்லாமல் அதில் ஏதாவதொரு குற்றம் குறைவு ஏற்பட்டால், அதனால் வேண்டிய பலன் கிடைக்காது என்பது ஒருபுறமிருக்க, பெரிய அபாயமும் விளையும், ப்ரஹ்மராக்ஷஸ ஜன்மம் கிடைக்கும். ஆனால் மோக்ஷஸாதநமான பக்தியை அனுஷ்டிக்க ஆரம்பித்து அதில் விக்நம் ஏற்பட்டாலும் அதனால் ஒரு ஆபத்தும் நேர்ந்துவிடாது, செய்த அளவு வீணும் ஆகாது. அடுத்த ஒரு ஜன்மத்திலோ, அல்லது பல ஜன்மங்களிலோ அதைத் தொடர்ந்து அநுஷ்டித்து நாம் ஸித்தி பெறலாம் என்னும் கீதாசார்யன் அருளிச்செய்தான் ஆறாவது அத்யாயத்தின் முடிவில். இதுவுமொரு பெரிய லாபமல்லவா? இந்த விஷயம் ஸூத்ரத்தில் பேசப்படவில்லை.

இனி அவதாராத்யாயத்தில் கீதாசார்யன் ஸாதித்ததும், அதற்கு ஸ்வாமி பாஷ்யமிட்டருளியதும் வெகு அற்புதம். இவ்வத்யாயத்தின் ஆரம்பத்தில் கண்ணன், ஜகத் ஸ்ருஷ்டி காலத்தில் விவஸ்வானுக்குத் தானே கர்மயோகத்தை உபதேசித்ததாகவும், அது சிறிது காலம் கழிந்த பிறகு லோபித்துவிட்டதாகவும் அருளிச்செய்ய, அர்ஜுநன் திடீரென்று இங்ஙனம் ஒரு கேள்வி கேட்டதாக நாலாவது அத்யாயத்தில் உளது. அதாவது, "கண்ணா! விவஸ்வானின் காலம் எது? உன் காலம் எது? என்றைக்கோ இருந்த விவஸ்வானுக்கு நீ உபதேசம் செய்தாயென்று நான் நம்புவதெப்படி?" என்று. இதற்கு ஸமாதானம் சொல்லும் வகையில் கீதாசார்யன் அவதாரத்தின் பல ரஹஸ்யங்களை

யுணர்த்தியிருக்கிறான். இங்கு பாஷ்யகாரர் ஒரு ஆக்ஷேபத்தை கிளப்பி அதற்கு தாமே ஸமாதாநமும் காட்டியிருப்பதன் அழகை என்னவென்போம்!

ஆக்ஷேபம் இருக்கும்படி எங்ஙனேயென்னில்—அர்ஜுநன் கண்ணனை ஒரு ஸாதாரண மநிதனாக எண்ணவில்லை; ஸர்வேச்வரனாகவே எண்ணியிருந்தான். ஸபா பர்வத்தில் தர்ம புத்ரர் ராஜஸூய யாகம் செய்தபோது, கோஷ்டியில் முதல் தாம்பூலம் யாருக்குரியது? என்கிற சர்ச்சையுண்டாக, பீஷ்மர் கண்ணனின் பெருமைகளையெல்லாம் ப்ரக்கப் பேசி அவனைத்தான் முதலில் அர்ச்சிக்கவேண்டுமென்று சொல்ல, அப்படியே அர்ச்சனையும் செய்யப்பட்டது. அடுத்த பத்தாவது அத்யாயத்தில் அர்ஜுநன் தானே அஸிதர், தேவலர், வ்யாஸர் முதலிய பற்பல மஹர்ஷிகளின் வாயிலாக கண்ணன், நாரதர் பெருமையைக் கேட்டிருப்பதாக ஸ்பஷ்டமாகவே கூறுகிறான். இப்படி அறிந்திருந்தும், 'விவஸ்வானுக்கு எங்ஙனம் உபதேசித்திருப்பாய்? என்று அவன் கேட்கலாமா?' பகவான் செய்ய முடியாத கார்யமொன்றுளதோ? ஆக அர்ஜுநன் கேட்டதே ஸரியில்லையே—

இதற்கு ஸ்வாமி ஸாதிக்கும் ஸமாதாநம் வருமாறு—அர்ஜுநன் ப்ரச்நத்திற்கு ஆழ்ந்த கருத்தொன்றுண்டு. அதை அவன் வார்த்தையாலல்ல; பகவான் விடுத்த மறு மாற்றத்திலிருந்து அறியவேண்டும். அர்ஜுனன் கேட்டதற்கு விடையளிக்கும் பகவான், அவதாரங்கள் பல, ஸத்யம், இன்ன ப்ரகாரமாக, இன்ன காரணத்தால், இன்ன காலத்தில், இன்ன பலங்களையுத்தேசித்து செய்யப்படுகின்றன என்றெல்லாம் நான்கு ச்லோகங்களால் மிக விரிவாக ப்ரத்யுத்தரம் அருளியிருப்பதை கவனித்தால் அர்ஜுநன் மனத்தில் அவதார விஷயமான பல சங்கைகள் இருந்ததாகவும், அவைகளையெல்லாம் வெளிப்படுத்த விரும்பி ஏதோ ஒரு கேள்வி கேட்டு வைத்தானென்றும், ஸர்வஜ்ஞனை யெம்பெருமான் அவன் கருத்தையறிந்து தினவடங்க ஸமாதானம் சொன்னானென்றும் கொள்ளவேணும். அர்ஜுநன் சங்கித்தது எப்படியென்றால், "கண்ணன் விவஸ்வானுக்குத் தான் உபதேசித்ததாகக் கூறுகிறானே, அப்பொழுது ஓர் அவதாரம் எடுத்திருக்க வேண்டும். அவனே தற்சமயம் கண்ணனாக அவதரித்திருக்கிறான். இதனால் இவன் அடிக்கடி இவ்வுலகில் அவதரிக்கின்றானென்று தோன்றுகிறது. முன்செய்த வினைகளின் பயனாக நாம் மனுஷ்யன் முதலிய பல சரீரங்களை அடிக்கடி எடுத்துப் பலவிதமான துன்பங்களுக்கும் ஆளாகிறோம். கண்ணனோ ஸர்வேச்வரன். அவனை ஒரு கர்மாவும் கட்டுப் படுத்தாது. அன்னான் அவதரிப்பதற்கு காரணமென்ன? அவன் பரிக்ரஹிக்கும் சரீரங்கள் எப்படிப்பட்டவை? அவதரித்து அவன் செய்யும் கார்யங்கள் யாவை? அவதாரத்திற்கு உரிய காலம் யாது? என்றெல்லாம் தெரிந்துகொள்ள விரும்பித்தான் அர்ஜுநன் கேட்க அவன் கருத்தையறிந்து கீதாசார்யன் ஸமாதானம் சொன்னானென்பது நமது பாஷ்யகாரர் காட்டும் அழகிய மர்மம்.

இப்படி பலபடிகளாலும் உயர்ந்த கீதாபாஷ்ய திவ்யக்ரந்தத்தை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் நித்ய பாராயணம், காலக்ஷேபம் முதலிய முறைகளில் வைத்துக் கொண்டு பாராட்டவேண்டியது மிகவும் அவசியமாகும். ... ...

---

— அடுத்த விஷயம் —

## தேசிக சிஷ்ய ஸம்வாதம்

அபரதேசிகனென்றும் பூர்வாபரதேசிகனென்றும் அபிநவதேசிகனென்றும் விருது வஹிக்கும் வித்வான்கள் இந்த ஸம்வாதத்தையாராய்ந்து இதன் ஸாமஞ்ஜஸ்ய அஸாமஞ்ஜஸ்யங்களை நம்முடைய வாழ்நாளில் உலகத்துக்கு நிரூபித்துக் காட்டுவார்களாயின் "இவர்களுக்குள்ள ஞானந்தான் ஒன்றுமே தேசிகனுக்கும் இருந்தது போலும்" என்று பறைசாற்றுமவர்கள் வாயடங்கி ஒடுங்கி நிற்பர்கள்.

# தேசிக—சிஷ்ய ஸம்வாதம்.

## — இரண்டாவது ஆஹ்னிகம் —



இங்கே ஸேவைஸாதித்தருள்பவர் ஐம்பதாண்டுகட்கு மூன்பு திருநாடலங்கரித்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ காஞ்சீ. வாதிகேஸரி அழகியமணவாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி. இந்த மஹாஸ்வாமியின் திருவருளால் ஸம்ப்ரதாயார்த்த தத்வங்களை யுணர்ந்தவரே இங்கு சிஷ்யபதவியில் நிற்கிறார். தேசிகன் அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து பரமக்ருபையுடன் சோதிவாய்திறந்து விஷயங்களை அற்புதராக ஸாதிக்கிறார்.

637. (தேசிக) முத்தூ! நீ வெகுதாழிகையாக இவ்விடம்வந்து காத்திருக்கிறாய்போலும்; நான் ந்யாஸவிம்சதியில் * ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ * என்கிற சுலோகத்தில் சிஷ்யலக்ஷணம் சொல்லியிருக்கிறேன்; அந்த லக்ஷணபூர்த்தியை உன்னிடத்தில் காண்கிறேன். முக்கியமாக *தத்வபோதாபிலாஷீ * ப்ரச்நகால ப்ரதீக்ஷ: * என்கிற லக்ஷணம் உன்னிடத்தில் குடிகொண்டிருப்பதற்கு மகிழ்கிறேன். நேற்று நான் சொல்லிமுடித்தபோது "அடுத்தஸம்பாஷணைகளில் அநவதிக ரத்னங்கள் பெறுவாய்" என்று சொல்லியிருக்கிறேனென்பது உனக்கு நினைவிருக்குமே. ரத்னங்கள் பெறுவது உன்னுடைய பாக்யாதீனம். நீ கேட்கிற கேள்விகளிலிருந்துதான் உனக்கு ரத்னங்கள் கிடைக்க வழி ஏற்படும்.

638. (சிஷ்ய) தந்யோஸ்மி. நேற்று அடியேன் ஸ்வாமிஸன்னிதியில் பெற்ற ரத்னங்களைப் பலநண்பர்கள் பக்கலிலே விஜ்ஞாபிக்க நேர்ந்தது. ப்ராமாணிகர்களாயுள்ளவர்கள் உகந்துகேட்டு அலப்யலாபம் பெற்றதாகக் கூறி அஹோபாக்யமஹோபாக்யமென்றார்கள். *ஜ்ஞானலவ துர்விதக்தம் ப்ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி * என்னும்படி யிருப்பவர்கள் சிலர் 'இதெல்லாம் உன்னுடைய

கல்பனே யத்தனே' என்று சொல்லி விஷயசர்ச்சையில் வாய்திறக்க மாட்டாமல் "கேசித் த்வங்கார ஹுங்காரை: க்ருதக்ருத்யா பவந்தி ஹி" என்கிற கணக்கிலே க்ருதக்ருத்யராயினர். அன்னவர்கள் தொலையட்டும். அடியேனுடைய வினக்களுக்கு விடையாக ஸ்வாமிஸாதித்தருளும் விஷயங்கள் ஏடுபட்டு நீடுலகில் நீடூழி நிலவுமானல் ஈதொப்பதொரு மஹோபகாரமுண்டோ?

639. (தேசிக) ஸ்ரீராமாயணமோ ஸ்ரீவிஷ்ணுபுராணமோ ஸ்ரீகீதையோ எல்லாம் ஸம்வாத ரூபமாகவே அவதரித்து தத்வார்த்தங்களை எளிதாக உலகுக்குத் தெளிவித்திருக்கின்றன. அவ்வண்ணமாகவே இந்த நம்முடைய ஸம்வாதமும் உண்மையுணராதபலர்க்கும் உண்மைகளை யுணர்த்திக் கண்விழிக்கப் பண்ணுமென்பதில் ஐயமில்லை; வீண்போது போக்காதே விவக்ஷிதப்ரச்நங்களைச் செய்து விடைபெறுவாயாக.

640. (சிஷ்ய) இதோ வினவததொடங்குகிறேன். நேற்றைய ஸம்பாஷணவஸானத்தில் "இன்று நவரத்னங்கள் நிறைந்த நவநிதிகள் பெற்றேன்" என்று அடியேன் விஜ்ஞாபித்தபோது "நீ பெற்றவை பலவிஷயங்களல்ல; ஒரே விஷயந்தான்; அதாவது என்னுடைய உக்திகளில் ரஸகனமாகக் காணுமவையெல்லாம் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செயல் மூலமானவையே என்பதொன்றே" என்று ஸ்வாமிஸாதித்தது; அதை ஸ்தூணநிகநநந்யாயேந நாட்டுவதற்காகவே இன்று சில வினக்களை விஜ்ஞாபிக்கிறேன். நேற்று ஸ்தோத்ரபாஷ்யத்திலன்றே பெரும்பாலும் சர்ச்சைநடந்தது. அந்த ஸ்தோத்ரபாஷ்யத்திலேயே (53.) * மம நாத! யதஸ்தி யோஸ்ம்யஹம்* என்கிற சுலோகத்தின் பாஷ்யத்திலே சிலவிசாரங்களைக் கிளப்பி முடிவில், "மஹதாமபி கேஷாஞ்சித் அதிவாதா: ப்ருதக்விதா:, தத்ததர்த்தப்ரசம்ஸாதித்பரத்வாத் அபாதிதா:" என்று ஒருகாரிகையிட்டிருப்பது திருவுள்ளத்தில் நினைவிருக்கிறதோ?

641. (தேசி) மாணீ! நீ யிப்போது ஸ்தோத்ரபாஷ்யமென்றவுடனே இதைத்தான் ப்ரஸ்தாவிக்கப்போகிருயென்று நான் எண்ணினதுண்டு; இதைப்பற்றி உனக்குத் தினவடங்கச் சொல்லியே தீருவேன். நீ எடுத்த காரிகையில் உத்தரார்த்தத்தின் பொருளை யறிந்திருக்கிருயன்றே. "அதிவாதமாகையினலே அவற்றைத் தள்ளவேண்டியது" என்று நான் இழித்தோ பழித்தோ முடித்திருக்கவில்லை. "அபாதிதா:=குற்றமற்றவை" என்றே முடித்திருக்கிறேன்; அதற்குக் காரணமும் அங்கேயே கூறியிருக்கிறேன் "தத்ததர்த்தப்ரசம்ஸாதிதத்பரத்வாத்" என்று ஹேதுவைச் சொல்லி, அதஏவ அபாதிதா: என்று முடித்திருக்கிறேன். ஆளவந்தார் சங்கராசார்யரை உள்ளத்திற்கொண்டு "பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரம:" என்றருளிச்செய்தாப்போலே நான் சொல்லிற்றிலேனல்லவா?

642. (சிஷ்ய) ஆனலும் அதிவாதம் என்பதற்கு அதிக்ரம்யவாதமென்று தானே அர்த்தம். சாஸ்த்ரமதிக்ரம்ய, யுக்திமதிக்ரம்ய, உபபத்திமதிக்ரம்ய செய்யும் வாதத்தையன்றே அதிவாதமென்பது. தேவரீர் பரமாசார்யராகக் கொண்டவர்களின் ஸ்ரீஸூக்திகளை யுத்தேசித்தேயன்றே "மஹதாமபி கேஷாஞ்சித் அதி

வாதா: ப்ருதக்விதா:" என்று காரிகையிட்டது. இது யுக்தந்தானு என்று மந்தமதியான அடியேனுக்கு ஜிஜ்ஞாஸை; மனச்சாட்சியை மீருமல் ஸாதிக்கவேணும்.

643. (தேசி) நீ கேட்பது மிக யுக்தமே; சிலசில ஸமயங்களில் எனக்கு மதிவிப்ரமமுண்டாகி பூர்வாசார்யஸூக்திகளுக்கு முரணுகவும் ஸ்வோக்திகளுக்குங் கூட முரணுகவும் எழுதிவைக்க நேர்ந்துவிடுகிறது. விளக்கமாகத் தெரிவிக்கிறேன், சிறிது அவதானத்துடன்கேள். ஸ்தோத்ரரத்னத்தில் * வபுராதிஷுயோபி கோபிவா * என்கிற சுலோகத்தினுல் ஆத்மஸமர்ப்பணம் செய்தருளின ஆளவந்தார் உடனே அடுத்த சுலோகமான * மம நாத யதஸ்தி * என்பதில் *கிம் நு ஸமர்ப்பயாமி தே * என்ருர். திருவாய்மொழியில் (2-3-4) * எனதாவியுள்கலந்த * என்றபாசுரத்தின் ப்ரதிச்சந்தமாக இந்த இரண்டு ச்லோகங்களும் அவதரித்தவை யென்பதை நெடுநாளைக்குப்பிறகுதான் தெரிந்துகொண்டேன். மேலே காட்டிய திருவாய்மொழிப்பாசுரத்தின் முன்னிரண்டடிகளின் பொருளை ஒரு ச்லோகத்தாலும் பின்னிரண்டடிகளின் பொருளை மற்றொரு சுலோகத்தினுலும் [ஸ்வல்ப ப்ரகார பேதத்தாலே] அநுஸந்தித்துள்ளார் ஆளவந்தார். இங்கே முந்தின ச்லோகத்திற்குப் பிந்தின ச்லோகம் விவரண ரூபம் என்றும் சொல்லலாம்; முந்தின ச்லோகத்திற் பண்ணின ஆத்மஸமர்ப்பணத்திற்குப் பிந்தின ச்லோகத்தினுல் அநுதாபம் காட்டுகிருர் என்றும் சொல்லலாம். இவை பரஸ்பர விருத்த யோஜனைகளாகமாட்டா. எதனுல் ஆகமாட்டாவென்பதை நான் சொல்லுவதற்கு முன்னே நீயே சொல்லு, பார்ப்போம்.

644 (சிஷ்ய) இதைப்பற்றி அடியேன் ஆரஅமர ஆராய்ந்திருப்பதனுல் விஜ்ஞாபிக்கிறேன். விவரணபரமாகக் கொண்டாலும் அநுதாபபரமாகக் கொண்டாலும் சாஸ்த்ரார்த்த சிக்ஷையில் விப்லவமில்லை. ஆத்மஸமர்ப்பணம் பண்ணவேண்டா வென்று ஒரு ஆசார்யரும் எழுதிவைக்கவில்லை. ப்ரத்யுத, "ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவிடில் ஸர்வமுக்தி ப்ரஸங்கமாம்; ஸமர்ப்பிக்கில் அவனதான வஸ்துவை அவனுக்குக் கொடுத்ததாம்; ஆனுல் செய்யவடுப்பதென்னென்னில், ஸமர்ப்பிக்கவும் வேணும், அநுசயிக்கவும் வேணும்" என்றே தேவரீர் ஸச்சரித்ர ரக்ஷையில் ஆசார்யா: என்று கொண்ட ஆசாரியர்கள் அருளிச்செய்து வைத்திருக்கிருர்கள். திருக்குருகைப் பிரான் பிள்ளானும் "எனதாவியுள்கலந்த பாசுரத்தின் ஆருயிரப்படியில்–" இப்படி எம்பெருமானேடு கலந்த கலவியாலுண்டான நிரவதிக ப்ரீதியாலே அறிவழிந்து 'இவ்வாத்மா தம்முடையதன்று' என்று நிருபிக்கமாட்டாதாராய் அவன் தம்மோடுகலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாருகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளாவடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து 'தருகிற நான் ஆர்? தரப்புகுகிற இவ்வாத்மா ஆர்? பண்டேயுனக்கு சேஷமாயிருக்கிற இவ்வாத்மாவை நீகொண்டருளினயத்தனையிறே' என்கிருர்" என்றருளிச் செய்துள்ளார். பிள்ளானருளிச் செயலான விதில் முன்னம் 'அறிவழிந்து' என்றும் 'நிருபிக்கமாட்டாதாராய்' என்றும். மேலே "பின்னையும் 'தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து" என்றுமருளிச் செய்திருப்பதானது ஆளவந்தாருடைய ஸ்ரீ ஸூக்தியில் "ப்ரபுத்ததீ:" என்றிருப்

பதைக் கொண்டே யென்பதில் ஸந்தேஹமில்லை. தேவரீர் ஆருயிரப்படியை ஸேவிக்கவேயில்லை யென்பது ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. ஆளவந்தார் ஒரு கால் அப்ரபுத்தராயிருந்து மற்றொருகால் ப்ரபுத்தராக ஆய்விட்டாரோ? என்று தேவரீர் க்ஷேபித்திருப்பதற்கு விஷயமில்லையே.

645. (தேசி.) மாணீ! நீ நன்றாகவே க்ரஹித்திருக்கிறாய். ப்ரபுத்ததீ: என்பது ஆளவந்தார்தாமே தம் திருவாக்காலே பணித்துத் தம் திருக்கையாலே யெழுதிவைத்ததாயிருக்கச் செய்தேயும், அதை நான் குறிக்கொள்ளாமல் "அஸ்ய யாமுநாசார்யஸ்ய ப்ராகேவ ப்ரதிபுத்தத்வாத்" என்றும், "ந கலு *அத்யைவ மயா ஸமர்ப்பித இத்யுக்தே: அநந்தரம் அஸ்ய தத்வப்ரதிபோத:" என்றும் திசைமருள் கொண்டவன்போல் எழுதிவைத்திட்டேனந்தோ. பிள்ளானாருயிரப்படியில் "அறிவழிந்து" என்றும், "நிரூபிக்கமாட்டாதாராய்" என்றும், "பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து" என்றும் ஸாதித்திருப்பதை முன்னம் ஸேவித்திருந்தேனாகில் அப்படியெழுதியிருக்கவே மாட்டேன். அந்தப்பாசுரத்திற்கும் இந்த ச்லோகங்களுக்கும் தொடர்பு இருப்பதாகவே நான் உணராதிருந்தொழிந்தேனே. உள்ளதை உள்ளபடி ஒப்புக்கொண்டுதானேயாகவேண்டும்.

646. (சிஷ்ய.) * சீறியருளாதே யென்று பிரார்த்தித்து ஒன்று விஜ்ஞாபிக்கிறேன்; * வதந்தீ ஜாரவ்ருத்தாந்தம் பத்யௌ தூர்த்தா ஸகீதியா. பதிம் புத்த்வா ஸகி! தத: ப்ரபுத்தாஸ்மீத்யபூரயந்* என்றாற்போன்ற விப்ரலம்பகவாக்யமன்று ஆளவந்தாருடையது. முன்பு அப்ரபுத்தராயிருந்து பின்னை ப்ரபுத்தரானார் என்பதும் பொருளன்று. சாஸ்த்ரார்த்தத்தை வெளியிடுமடைவிலே இத்தகைய வாக்விந்யாஸங்கள் ரஸபுஷ்டியில் சேருமவை. ஒன்றுபார்க்க; நம்மாழ்வார் திருவாய்மொழியில் [மாசறுசோதிபதிகத்தில்] மடலெடுக்கவேணுமென்று திருவுள்ளத்திலே கொண்டு அதை வெளிக்காட்டாமலே "ஊரவர்கவ்வை தோழீ! என் செய்யுமே" என்றார்; அறிவுடையார் இப்படி துணிந்து சொல்லலாமோ? என்று தோழிகேட்க; "அறிவிழந்து எனை நாளையம்" என்றார் இதன்பொருள் என்ன? என்னுடைய அறிவுகெட்டுப்போய் எத்தனைகாலமாயிற்று தெரியுமா? என்றன்றோ சொல்லுகிறார். எம்பெருமானிடத்தில் ப்ராவண்ய முண்டாவதற்கு முன்பு எனக்கு நல்ல அறிவிருந்தது வாஸ்தவம்; பகவத் ப்ராவண்யம் வளரவளர அறிவன்றோ குடிபோயிற்று – என்று ரங்காஸ்தாநே ஸ்திதா: ரஸிகா ஆசார்யா: வியாக்கியானம் பண்ணியருளுகிறார்களென்பது *வித்வத்ஸேவாவிமலமநஸ்கரான தேவரீர் அறியாததொன்றோ?

647. (தேசிக.) *ப்ரபுத்ததீ:* என்றதற்கு 'ஸத்ய: ப்ரபுத்ததீ:' என்று பொருள் கொள்வதுதான் ரஸவத்தரம். பிள்ளான் இதை ஸுஸ்பஷ்டமாகக் காட்டியருளினதை யறிந்தபிறகு சிறிதேனும் கலங்க ப்ரஸக்தியுண்டோ? 'அஹம் மயா ஸமர்ப்பித:' என்றது அப்ரபுத்ததசையில் வார்த்தை போல் கொள்ளத்தக்கது; *அதவா கிம் நு ஸமர்ப்பயாமி தே* என்றது ப்ரபுத்ததசையில் வார்த்தை போல் கொள்ளத்தக்கது—என்று சிக்ஷிப்பது இங்கு விவக்ஷிதமேயொழிய, ஐயோ!

ஆத்மஸமர்ப்பணம் பண்ணிவிட்டோமேயென்று அதற்கு ப்ராயச்சித்தம் செய்து கொள்ளத் தேடுவதாக அர்த்தமன்று; அப்படி எந்த ஆசாரியரும் எழுதி வைக்கவுமில்லை. அஸ்தாநே கலங்கி ஏதேதோ எழுதி வைத்திட்டேனப்பா!

648. (சிஷ்ய.) 'அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:' என்றதற்கு அநுசயம் காட்டுகிறார் அடுத்தச்லோகத்தினால் என்கிற அவதாரிகை தேவரீருக்கு அபிமதமா? அநபிமதமா? என்று தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். இவ்விடத்து ஸ்தோத்ர பாஷ்யத்தை ஸேவிக்கும்போது அநுசயமென்கிற பக்ஷம் அநபிமதமென்றும் அதஏவ அந்தபக்ஷம் ப்ரதிக்ஷிப்தமென்றும் காண்கிறது. இது நிலைத்து நின்ற திருவுள்ளந்தானோ? சிறிது ஆலோசித்து ஸாதிக்கவேணும்.

649. (தேசிக) நீதிமன்றங்களில் பெட்டியிலேற்றி மருளவைத்துக் கேள்வி கேட்பதுபோல் கேட்கிறாயே. நீ ஒவ்வொன்றையும் ஆழ்ந்து பார்த்திருப்பதோடு அபாரமான ஸ்ம்ருதிசக்தியுமுடையையென்று தெரிவதனால் உன்னிடத்தில் உள்ளதை ஒளித்திடாமல் தெரிவித்துத்தானே யாகவேண்டும். ஸ்தோத்ரபாஷ்யமெழுதும்போது அநுசயபக்ஷம் அநபிமதமாகவேயிருந்தது. ரஹஸ்யத்ரயஸாரத்தில் (12) ஸாங்கப்ரபதநாதிகாரத்தில் அதற்கு முரணாகத்தான் எழுதிவைத்திருக்கிறேன்; அதாவது "* மம நாத! யதஸ்தியென்கிற சுலோகத்தில் இஸ்ஸமர்ப்பணத்தைப்பற்ற அநுசயம் பண்ணிற்றும்" என்று எழுதிவைத்திருக்கின்றேன். அதற்கு நான் அவ்விடத்தில் இன்னது அபிப்ராயமென்று ஏதோ காட்டினேனாகிலும் முன்ச்லோகத்திற்பண்ணின ஆத்மஸமர்ப்பணத்திற்கு பின்சுலோகத்தில் அநுசயம் [அதாவது பச்சாத்தாபம்] உள்ளது தான் என்பதை நான் அபலபிக்க முடியாதபடியும், 'அது அப்படியன்று, இப்படி' என்று மெழுகுவதற்கு இடமில்லாதபடியும் ஆயிற்று.

650. (சிஷ்ய) ஸ்வாமிந்! ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் (30) ஆசார்யக்ருத்யாதிகாரத்தின் முடிவில்—"வேதாந்தோதயந ஸம்ப்ரதாயமான மடைப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே கிடாம்பியப்புள்ளார்தாம் கேட்டருளினபடியே அடியேனைக் கிளிப்பிள்ளையைப் பழக்குவிக்குமாபோலே பழக்குவிக்க அவர் திருவுள்ளத்திலிரக்கமடியாகப் பெருமாள் தெளியப்ரகாசிப்பித்து மறவாமல் காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்களிவை" என்று ஸாதித்திருப்பதற்கு முரணாக இங்ஙனே பூர்வாசார்ய ஸூக்தி விருத்தமாகவும் ஸ்வோக்தி விருத்தமாகவும் வாக்யராசிகள் எப்படி யவதரித்தன? முன்னோர் மொழிந்த முறையைத் தழுவாதே ஸ்வச்சந்தமாகப் பேசிவைத்ததோடு நில்லாமல் 'இவை ஆசாரியர் பக்கலில் துவண்டு கேட்ட அர்த்தங்கள்' என்றும் எழுதிவைத்ததற்குப் பெரியார் ஏசிப் பேசும்படி நின்றது எங்ஙனே? நீசனேன் நிறையொன்றுமிலேனென்பதற்கு ப்ரதமலக்ஷ்யமான அடியேன் இங்ஙனம் விண்ணப்பம் செய்வதற்குச் சீறியருளாமல் பாவியேனைத் தெளிவித்தருளவேணும். திருத்திப் பணிகொள்ளவேணும்.

651. (தேசி.) அப்பா! நீ என்னுடைய க்ரந்தங்களை யெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்திருப்பது மட்டுமன்றிக்கே கண்ட பாடமாகவும் தரித்திருக்கிறாயென்

பதை நான் நன்குணர்ந்து கொண்டவனுதலால் ஏதோ சிலவற்றைச் சொல்லி உன்னை ஸமாஹிதனுக்க முடியாதென்று உள்ளபடியுணர்ந்திருக்கிறேன். உனக்குப் பரம த்ருப்தி விளையும்படி சொல்லியே தீருவேன். நான் சொல்லுமவற்றை நீ ஏடுபடுத்திவைத்து நீடுழி லோகோபகாரம் செய்து வைப்பாயென்றும் நம்புகிறேன். இனி எந்த விஷயத்திலும் வக்தவ்யசேஷமோ ஜ்ஞாதவ்யசேஷமோ கிடையவே கிடையாது என்னும்படியாக, நீ கேளாத விஷயங்களையுங் கூடக் கிளப்பி [உத்திதாசங்காபரிஹாரம், உத்தாப்யா சங்காபரிஹாரம் என்று சாஸ்த்ரஜ்ஞகோஷ்டிகளில் ப்ரஸித்தமான வகையில்] ஸமாதானங்கள் தெரிவிப்பேன்.

652. (சிஷ்.) இவ்வளவு திருவுள்ள முகந்தருளினது பாவியேனுடைய பரமபாக்யம். ஸ்தோத்ர பாஷ்யத்தில் "மஹதாமபி கேஷாஞ்சித் அதிவாதா: ப்ருதக்விதா:" என்று ஸ்வாமி ஸாதித்திருப்பதைப் பற்றித்தானே அடியேன் இன்று முந்துற முன்னம் ப்ரஸ்தாவித்தேன்; அதைப்பற்றி ஸ்வாமி முன்னம் தெளிவு பெறுத்த வேண்டுகிறேன். ஒன்றிரண்டு அதிவாதமன்றிக்கே பல அதிவாதங்கள் தேவரீருகந்த ஆசாரியர்களின் திருவாக்கில் தோன்றியிருப்பதாக வன்றோ அந்தகாரிகையினுல் அர்த்தமாகிறது. அதிவாதமென்றதை ஸ்தாபிப்பதோ, *அநுதாபாத் உபரமாத்* என்று அபராத பரிஹாராதிகாரத்திலே ஸ்வாமியே ஸாதித்தருளியிருக்கிறபடி அநுதபித்து உண்மையை யுணர்த்தியருள்வதோ இரண்டத்தொன்று செய்தருவேணும்

653. (தேசி.) முத்தா! 'அதிவாதமென்றதை ஸ்தாபிப்பதோ' என்கிற விகல்பம் ப்ரஸ்தாவமாத்ரத்திலும் எனக்கு அஸஹ்யமென்பதை நீ யறியாயோ? அவஹிதனுய்க் கேள். *செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே* என்று நான் சொல்லி வைத்தது சொல்லளவிலே நின்று விட்டதே யொழிய ஸம்ப்ரதாயார்த்த நிர்வாஹங்களில் அது பயன்படவில்லை யென்பதை ஸ்வாமி பாஷ்யகாரருடைய திவ்யஸூக்திகளை ஆழ்ந்து பரிசீலனம் பண்ணின பிறகே உணரப் பெற்றேன். "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்களொருங்க விடுவர்" என்கிற ஆசார்ய ஸ்ரீஸூக்தியை நெடுநாள் வரையில் அவலீலையாகக் கொண்டிருந்தேன். கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம் ஆகிற இரண்டு திவ்யக்ரந்தங்களையும் ஆழ ஆழ இழிந்து பரிசீலனை செய்த பிறகுதான் நான் அர்த்ததத்துவங்களை அற்புதமாகவும் அநவத்யமாகவும் அறியப் பெற்றேன். எவ்வளவோ கஹனமான சாஸ்த்ரார்த்தங்களை யெடுத்துரைத்தாலும் அநாயாஸமாக க்ரஹிக்கவும் தரிக்கவும் ப்ரவசனம் செய்யவும் வல்லையான நீ ஆஷ்டாவாகவும் ச்ரோதாவாகவும் அமைந்தது என்னுடைய அத்ருஷ்டம். அதிவாதமென்ற விஷயத்தில் இதோ சொல்லுகிறேன் கேள். ஸம்ப்ரதாயத்தில் மிகமுக்கியமாகத் தெளியவேண்டிய விஷயம் ஒன்றே. ஏகவிஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாநப்ரதிஜ்ஞை போன்றது இந்த ப்ரதிஜ்ஞை என்று கொள்ளக்கடவாய். ஸ்வகத ஸ்வீகாரம், பரகத ஸ்வீகாரம் என்று இரண்டு சொல்லப்படுகிறது. 'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே—மாமேகம்

சரணம் வ்ரஜ' இத்யாதி ப்ரமாண சரீரங்களில் ஸ்வகத ஸ்வீகாரம் ஸ்பஷ்டமாகச் சொல்லப் படா நிற்க, பரகதஸ்வீகார மென்று ஒன்றுண்டோ? என்றும், இது பொருளற்ற பேச்சு என்றும் நெடு நாள் கலங்கியிருந்தேனென்பதை அபலபிக்க கில்லேன். கீதையில் எட்டாமத்யாயத்தில் (14)*அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:, தஸ்யாஹம் ஸுலப:* என்ற விடத்தில் சேதநன் தலை யிலே பெருஞ்சுமையை ஏறிட்டிருக்கச் செய்தேயுங்கூட அருளிச் செயல் கடலில் ஆழ மூழ்கினவரான நம் பாஷ்யகாரர் அவ்விடத்தில் அற்புதமாக அருளிச் செய்திருக்கிற திவ்யஸூக்திகளை ஸேவித்த பின்பே *ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ:* என்ற அர்ஜுனன் படியிலே அமைந்தேன். இது ஸத்யம்.

654. (சிஷ்) அந்த ஸ்ரீஸூக்திகளையும் அவ்விடத்தில் ஸ்வாமியினுடைய தாத்பர்ய சந்த்ரிகா ஸூக்திகளையும் சில மஹான்கள் எடுத்து உபந்யஸிக்கக் கேட்டிருக்கிறேன். ஆனாலும் ஸ்வாமி திருவாக்காலே கேட்கப் பெறுவது விசேஷமல்லவா? ஸ்வாமியே ஸ்வயம் ப்ரஸங்கித் தருளினபடியாலே பரம குதூ ஹலத்துடன் கேட்கிறேன். ஸாதித்தருளவேணும்.

655. (தேசி.) இப்போது நான் ப்ரஸ்தாவித்த இடம் ஸாமான்யமான தன்று. ஸம்ப்ரதாயத்தில் தோன்றும் பலவகைக் கலக்கங்களும் தீர்ந்தொழியு மிடம் இது. ஸித்தாந்தத்தில் ப்ரதாநப்ரதிதந்த்ரமான சரீர சரீரி பாவத்தின் பெருமையைப் பற்றி நான் தெரிவிக்கையில் *யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாத் அவித்யாதம: ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரம் அந்திமயுகே கச்சித் விபச்சித்தம:, தத்ரைகத்ர ஜடித்யுபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா ஹேவாகப்ரதமாநஹைதுககதாகல்லோலகோலாஹல:* என்று திடமாகத் தெரிவித்திருக்கிறேனன்ரு? சரீராத்ம பாவமாகிற இந்த ப்ரதாந ப்ரதிதந்த்ரத்தை நன்குணர்ந்த ஒரு வித் வான் இருக்குமிடத்தில் எந்த மதஸ்தர்களும் நிற்கமாட்டாமல் பாறிப் பறந்து போவர் என்று துணிந்து கூறியிருக்கின்றேனல்லவா? அதே ரீதியில் மேலே ப்ரஸ்தாவித்த கீதா பாஷ்ய திவ்ய ஸூக்தியை நன்குணர்ந்த வொரு வித்வான் நிற்குமிடத்தில் துஷ்டஸம்ப்ரதாய துர்வாதங்களெல்லாம் நெடுந்தூரத்தில் அகன்றொழியு மென்னத் தட்டில்லை; அந்த ஸ்ரீ ஸூக்திகளைக் கேள்—

எட்டாவது அத்யாயத்தில் பதினன்காவது ச்லோகம். "அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:, தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:" என்பது. *ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம்* என்று பகவான் தான் தனக்கு உயிர்நிலையாகக் கொண்டாடும் ஞானியானவன் தன்னை உபாஸிக்க வேண்டியபடியையும் பேறுபெறும் பரிசையும் இனி யருளிச் செய்கிருன் கண்ண பிரான் என்று அவதாரிகையிட்டு சுலோகத்தை வெகு அழகாக வியாக்கியானித் தருளியிருப்பது ஸ்ரீராமாநுஜபாஷ்யமொன்றில்தானுள்ளது. இந்த சுலோகத் தின் கருத்து என்னவென்ருல், அர்ஜுநா! எவன் இடைவிடாமல் எப்போதும் வேறொன்றிலும் நெஞ்சைச் செலுத்தாதவனாய் என்னையே ஸ்மரிக்கிருனே, என்னோடு நித்யஸம்ச்லேஷத்தை விரும்பி யிருக்கின்ற அந்த பக்தனுக்கு நான்

ஸுலபன் என்பதாகும். இதில் (தஸ்யாஹம் ஸுலப:) அவனுக்கு நான் எளியன் என்கிற பகுதிக்கு ஸ்வாமி பாஷ்யம் செய்தருளியிருக்கும் பரிசு அற்புதமானது. பாஷ்யபங்க்திகளை என் வாக்காலே கேளாய்—

"தஸ்ய நித்யயுக்தஸ்ய-நித்யயோகம் காங்க்ஷமாணஸ்ய யோகிந:. அஹம் ஸுலப:-அஹமேவ ப்ராப்ய:,ந மத்பாவ ஐச்வர்யாதிக:-ஸுப்ராபச் ச. தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே; மத்ப்ராப்த்யநுகுண-உபாஸநவிபாகம் தத் விரோதி நிரஸநம் அத்யர்த்த மத்ப்ரியத்வாதிகஞ்ச அஹமேவ ததாமி இத்யர்த்த:. *ய மேவைஷ வ்ருணுதே தேந லப்ய:* இதிஹி ச்ருயதே. வக்ஷ்யதே ச *தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம். ததாமி புத்தியோகம் தம் யேந மாமு உபயாந்தி தே. தேஷா மேவாநுகம்பார்த்தம் அஹமஜ்ஞாநஜம் தம:. நாசயாம் யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா*இதி."

இவ்வளவும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகள். இவற்றின் பொருளாவது—என்னேடு எப்போதும் கூடியிருக்கவேணுமென்கிற விருப்பமுடையவனுக்கு அடையத் தகுந்தவன் நானேயாகிறேன். மிக எளிதாக அடையத் தகுந்தவனுமாகிறேன் நான்; (அதாவது) அவனுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாதவனாய் (அவனைப் பிரிந்து தரித்திருக்கமாட்டாதவனாய்) நானே அவனை வரிக்கிறேன். என்னையடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலைமையையும் அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும் என்னிடத்தில் அதிகமான ப்ரீதி முதலியவைகளையும் நானே கொடுக்கிறேன். *நாயமாத்மா ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்த கீதையிலேயே மேலே பத்தாவது அத்யாயத்தில் 10, 11 ச்லோகங்களாலும் சொல்லப்படுகிறது—என்பதாம். ஸத்ஸம்பிரதாய ஸாரார்த்தம் இங்கே பொதிந்திருக்குமழகைத் தெரிந்து கொண்டிருக்கிறாயா?

656. (சிஷ்ய) ஸ்வாமிந்! அடியேன் வாக்கால் உப்பாதிக்கிறேன், திருச்செவிசாத்தியருள்க. ஸ்ரீவசநபூஷணத்தில் 142 "அவன் இவனைப்பெற நினைக்கும் போது ப்ரபத்தியும் உபாயமன்று" என்று தொடங்கி அருளிச் செய்தவிடத்தில் வியாக்யானத்தில் மணவாளமாமுனிகள் 'உடமையை உடையவன் சென்று கைக் கொள்ளுமாபோலே ஸ்வாமியான அவன் தானே வந்து அங்கீகரிக்கக் கண்டிருக்கக் கடவ பரதந்திரனை இச்சேதநனவன் தான் ப(ஹ)லியாய் தன் ஸ்வீகாரத்தாலே ஸ்வதந்த்ரனை அவனைப்பெற நினைக்குமளவில் அவன் நினைவு கூடாதாகில் இப்படி விலக்ஷணமாயிருக்கிற ப்ரபத்தியும் தல்லாபஸாதனமாகாதென்றபடி. ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனை அவன் ஸ்வம்மாய் பரதந்த்ரனாயிருக்கிற இவனை ஸ்வேச்சையாலேபெற நினைக்குமளவில் பாதகமும் பிரதிபந்தகமாகமாட்டாதென்கை. இவை யிரண்டாலும் ஸ்வகதஸ்வீகாராநுபாயத்வமும் பரகதஸ்வீகாரோபாயத்வமும் காட்டப்பட்டது.' என்றருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகள் மேலே காட்டிய கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்திகளையே அடியாகக் கொண்டவையென்று நன்கு புலப்படுகின்றன. (மணவாள மாமுனிகள்) தாம் முன்பு ஒரு வேஷத்தாலே கீதா பாஷ்யத்தில் வடமொழியாலே அருளிச் செய்ததை பின்பு மற்றொரு வேஷத்தாலே

ஸ்ரீவசநபூஷண வியாக்யானத்தில் தென்மொழியாலே அருளிச் செய்தாரென்று அறுதியிடத் தட்டில்லை. இதற்கு மேல் ஸ்வாமி ஸாதிக்கவேணும்.

657. (தேசி.) மேலே உதாஹரித்த கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்தியில் ஒவ்வொரு வாக்கியமும் ஸாரமானது; (*தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே*) ஞானியான சேதநனைப் பிரிந்திருப்பதை எம்பெருமான் தான் பொறுத்திருக்க மாட்டாதவனாய்த் தானே அந்த சேதநனை வரிப்பதாகக் கூறுகின்றவிதுதான் பரகத ஸ்வீகாரமென்பது. (*மத்ப்ராப்த்யநுகுணோபாஸந விபாகம் அஹமேவ ததாமீத்யர்த்த:) என்கிற இந்த வாக்கியமானது ஸ்வகதஸ்வீகாரப் பற்றுசை நன்றாகக் கழிக்கிறது. இத்தலையில் விளைவதெல்லாம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாக விளைகின்றதேயன்றி இவன் தலையாலே விளைவித்துக் கொள்ளுமது ஒன்றுமில்லையென்கிற ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் தெளிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் *நாயமாத்மா ச்ருதியையும் எடுத்துக்காட்டியருளின ஸ்வாமி பரகதஸ்வீகாரத்திற்கு அதுவே பிரமாணமென்று நிருபிக்கிற முகத்தாலே பிறருடைய குத்ஸிதவாதங்களையும் அகற்றினாராயிற்று. இவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் நானெழுதியிருப்பது. "உக்தஸ்ய அதிவாத மாத்ரத்வசங்காவ்யுதாஸாய ச்ருதிமூலதாமாஹ * யமேவேதி. என்று

658. (சிஷ்ய) இவ்விஷயத்தில் ஸாரமானது இவ்வளவே; *த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே* என்றும் *புகலொன்றில்லாவடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே* என்றும் சொல்லிக் கொண்டு (அதாவது, நாம் பற்றுகிறோமாகக் காட்டிக் கொண்டு) திருவடிகளிலே விழுந்தாலும், 'இது நாம் பற்றின பற்றன்று; எம்பெருமான் தானே பற்றுவித்தானத்தனை; அவனுடைய க்ருஷி பலித்ததத்தனை' என்று உள்ளூற அநுஸந்திக்க ப்ராப்தம். இதையிட்டே பரகத ஸ்வீகார மென்கிறது. என்றிவ்வளவு தானே.

659. (தேசிக) *நாயமாத்மாச்ருதியின் பொருளில் தெளிவில்லாமேயிருப்பார் பலருளர். அன்னவர்கட்கு நற்றெளிவைப் பிறப்பிக்கவே இந்த கெட்டம் அமைந்தது. இங்கே ஸ்வாமி ஸாதித்தது தீபம் போன்றது. நானெழுதியது ப்ரதீபம் போன்றது தீபாதுத்பந்ந ப்ரதீப மென்பர்களே, இது இங்கு மிகத்தகும். "உக்தார்த்தே ப்ரமாணம் தர்கயதி *யமேவேதி" என்று எழுதலாமாயிருக்க, அங்ஙனம் எழுதாமல் "உக்தஸ்ய அதிவாதமாத்ரத்வ சங்காவ்யுதாஸாய ச்ருதிமூலதாமாஹ—யமேவேதி." என்று நானெழுதியிருப்பதை நோக்குமளவில் இந்த பரகதஸ்வீகாரபக்ஷத்தை அதிவாதமென்று அக்காலத்திலேயே பலர் பேசிக்கொண்டிருந்தார்களென்பது தெரியவருகின்றதன்றோ. அது யதார்த்த வாதமேயொழிய அதிவாதமன்று என்று விளக்கியிருக்கிறேன்.

660. (சிஷ்) ஒரு மருமத்தைக்கண்டறிந்து விஜ்ஞாபிக்கிறேன்; ஸ்தோத்ர பாஷ்யத்தில் *மஹதாமபி கேஷாஞ்சித் அதிவாதா:* என்று காரிகையிட்டருளின தேவரீரே இந்த பரகதஸ்வீகாரவாதம் அதிவாதமென்று முன்னம் கலங்கியிருந்து

பின்னே க்ரமச: க்ரமச: தெளிந்து இங்ஙனே ஸாதித்திருக்கலாமோவென்று நினைக்கிறேன்.........சாந்தம் பாபம் சாந்தம் பாபம். நீசனேன் இங்ஙனே நெஞ்சினால் நினைப்பதும் வாயினால் மொழிவதும் மஹாபசாரம். ஸவிநயம் ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். *தஸ்யாஹம் ஸுலப:* என்கிற கீதா மூல ஸூக்தியானது இவ்வளவு பாஷ்யத்தை ஸஹிக்குமா? ''தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே'' இத்யாதி விவரணத்திற்கு மூலத்தில் என்ன சொல்இருக்கிறது? ஒன்றுமில்லையே. *நாயமாத்மா ச்ருதியை இங்கெடுத்துக் காட்டுவதற்குத் தான் என்ன ப்ரமேய மிருக்கிறது? மூலத்தில் ''அநந்யசேதா:'' என்றும் * ஸததம்நித்யச: மாம் ஸ்மரதி* என்றும் சேதநன் தலையிலே பெருஞ்சுமைகளைச் சுமத்தியிருக்க, அதனோடும் பொருந்த வில்லையே பாஷ்யஸூக்தி.

661. (தேசி.) அசடே! மருளாதே; ஸ்வாமி ஸ்ரீஸூக்தியிலும் அநுபபத்தி சங்கிக்கிறாய்போலும். அநந்யசேதஸ்கத்வேந ஸததம் நித்யச: ஸ்மரணமும் சேதனனாலே வந்ததன்று; *யமேவைஷ வ்ருணுதே* என்னும்படியான தன்னுடைய வர்ணத்தாலே வந்ததத்தை - என்றன்றோ ஸ்வாமி பாஷ்யகாரர் காட்டியருள்வது. பகவத் ப்ரபாவமறியாதார் இதை அதிவாத மென்றே கழித்துவிடக் கூடுமென்றெண்ணியே நான் சந்த்ரிகையில் பரசுப்ரஹாரமாக எழுதி வைத்தது.

662. (சிஷ்) ஸ்வாமிந்! தேவரீருடைய திருவுள்ளங்களை இன்னமும் ஒளிக்காமல் விட்டு ஸாதிக்கவேணும். மஹாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை நிதியாகக் கொண்டு அவற்றில் பக்தி குலையாமல் அவற்றையுபஜீவித்து ஸாதித்த விஷயங்கள் இருக்கட்டும்; அவற்றில் அதிவாதமிருப்பதாகத் திருவுள்ளம் பற்றியிருந்த நிலைமையும் ஒன்றுண்டே; எந்தெந்த விஷயங்களில் அதிவாதமாகக் கருதியிருந்தது? அதை ஒவ்வொன்றாக ஸாதிகக வேணும். அதிவாதமென்றதற்கு அநுதாபங் கொண்டு ஹ்ருதயத்தை சிக்ஷித்துக் கொண்ட பிறகு பழைய அபிப்ராயத்தை ஏதுக்குக் கேட்கிறாய்? என்று க்ஷேபித்துத் தள்ளிவிடாமல் ஸாதித்தருளவேணும்.

663. (தேசி.) நெடுநாள் நெஞ்சிலூறியிருந்து தொலைந்த அபிப்ராயங்களை இப்போது கேட்க விரும்புகிறவுனக்குச் சொல்லித்தானாக வேணும். சொல்லுகிறேன் கேள். ஆனால் இது ஒரு நாளில் சொல்லித் தலைக்கட்டக் கூடியதன்று; பல நாள் தான் ஆகட்டுமே; க்ரமேண ஒன்று விடாமல் சொல்லிவருகிறேன். இவை உனக்குத் தெரியாதவையல்ல; பாணம் வெடிக்க வேணுமென்று ஆசைப்படுகிறாய். ஆசை தீரட்டும். ''பகவத் ப்ரவ்ருத்திவிரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி:—ப்ரபத்தி:'' என்றார்கள். அதாவது, சேதநனிடத்தில் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகிற ஸ்வப்ரவ்ருத்தி யுண்டானால் அது பகவத் ப்ரவ்ருத்திக்கு விரோதியாகிறது என்றும், அந்த ஸ்வப்ரவ்ருத்தி தொலைவதுதான் ப்ரபத்தி என்றும் ஆசாரியர்களின் திருவுள்ளம். நெடு நாள் வரையில் இதை அதிவாத மென்றே மறுத்து வந்தேன்.

664. (சிஷ்) இதில் பிறகு எப்படி தெளிவு விளைந்தது ஸ்வாமிக்கு? "இப்படி சிலர் கலங்குவர்கள். அவர்களைத் தெளிவிக்கிறோம்'' என்றும், ''அவர்களுடைய

கலக்கத்தை சமிப்பிக்கிறோம்" என்றும் ரஹஸ்ய நூல்களில் எழுதத் தகாத வார்த்தைகளை அஸக்ருத் எழுதி வைத்திருக்கிற தேவரீருடைய கலக்கங்களை சமிப்பித்துத் தெளிவித்த ஆசார்யர்களை ஸாதிக்க வேண்டாம்; தெளிவு விளைந்த ப்ரகாரத்தை ஸாதித்தால் போதும். அடியேன்போல்வார்க்கும் அது தெரிய வேண்டியதுதானே.

665. (தேசி.) இதிஹாஸ புராணங்களில் ப்ரபத்தி பண்ணினவர்களாகப் பார்க்கப்படுமவர்களின் சரிதைகளை யூன்றி நோக்கித் தெளிந்தேன். முக்கியமாக ப்ரபன்ன வ்யக்திகளிருவரை யெடுத்துக் காட்டுகிறேன். கஜேந்திராழ்வான் ப்ரபத்திபண்ணினுன், த்ரௌபதி ப்ரபத்தி பண்ணினுளென்கிறோம். இவர்கள் பண்ணினது என்னவென்று பார்ப்போம். *கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே* என்னும்படி யானை கரைக்கு இழுக்கவும் முதலை நீருக்கிழுக்கவுமாய் நெடுங் காலம் சென்றது. *உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறியுமவனுன எம்பெருமானுக்கு யானை படும் துயரம் தெரியாதா? ஆதிமூலமே! என்று கூவின் பிறகு தான் தெரிந்தது என்றால் இதை ஒரு மூடனுவது நம்புவனு? யானை இடர்ப்படத் தொடங்கின க்ஷணத்திலேயே இது தெரியாதா அவனுக்கு? *பகவதஸ் த்வராயை நம:* என்றும் *ஸ்ரக்பூஷாம்பரம் அயதாயதம் ததாந: திங்மாமிதி அநுக்ஜகர்ஜம் ஆஜகந்த* என்றும் பட்டர் ஸாதிக்கும்படியான எம்பெருமானுடைய கலக்கம் கஜேந்திராழ்வான் முதலைவாய்க் கோட்பட்ட தத்க்ஷணத்திலேயே தோன்றியிருக்க வேண்டாமா? *நாராயணுவோ! மணிவண்ணு நாகணையாய் வாராய் என்னாரிடரை நீக்காய்* என்று கஜேந்திராழ்வான் கத்தின பிறகு தான் எம்பெருமான் உணர்ந்தான் என்றால் உலகம் சிரியாதா? அப்போதே அவன் பதறி ஏன் ரக்ஷித்தருள வில்லை யென்று கேட்டால் இதற்கு என்ன விடை கூறலாம் சொல்லு பார்ப்போம்.

666. (சிஷ்ய) சொல்லுவதற்கு அபூர்வமாக என்ன இருக்கிறது? இதிஹாஸ புராண சரித்திரங்கள் ஒவ்வொன்றும் விலக்ஷண சாஸ்த்ரார்த்தத்தை வெளியிடுகைக்காகவன்றோ அவதரித்தது. இக்கேள்வியை நாஸ்திகனெருவன் கேட்டால் நாம் தலை குனிந்து வாய் மூடித் திசை தொறும் விழித்து நிற்பது தவிர வேறு என் செய்யவல்லோம். *ஆர்த்த த்ராண பராயணஸ் ஸ பகவாந் நாராயணே மே கதி:* என்று உருப்போடுகிறீர்களே, ஆர்த்தியுண்டானவன்றே ஆர்த்த த்ராணம் பண்ணுவதற்கென்ன? என்று கேட்டுவிட்டால் அவனுக்கு நிலமல்லாததொரு சாஸ்த்ரார்த்தத்தையன்றோ நாம் சொல்லிப்பிழைக்கவேணும். என்ன சாஸ்த்ரார்த்தம் சொல்லுவது? ஸ்வப்ரவ்ருத்தியானது பகவத்ப்ரவ்ருத்திக்கு விரோதி; அது உள்ளவுரையில் எம்பெருமான் ப்ரவர்த்திக்க மாட்டான்; கஜேந்திரனிடத்தில் ஸ்வப்ரவ்ருத்தி மிகைத்திருந்ததனுல் அப்போது ரக்ஷித்தருள நினைப்பிட வில்லை; அந்த ஸ்வப்ரவ்ருத்தியின் நிவ்ருத்தி தான் ப்ரபத்தி. இதைத் தான் *பரமாபதமாபந்நோ மநஸா அசிந்தயத் ஹரிம்* என்று புராணம் சொல்லிற்று. ஸ்வாமிந்! அடியேன் க்ரஹித்த இதெல்லாம் ஸரிதானு?

667. (தேசிக) அதிதராம் அபிநந்தநீயோஸி. த்ரௌபதீ விஷயத்தையும் கேள். கஜேந்திரனுடைய ஆபத்துக்கு மிக மேற்பட்டது இவளுடைய ஆபத்து.

இவளை மிக்க பெருஞ்சவை நடுவே பரிபவத்துக்கு ஆளாக்குவதும், அவள் கூக்குரலிட்டபின்பு ரக்ஷித்ததாகப் பேர் பெறுவதும் என்னே! அவள் ஏதோ ச்லோகஞ் சொன்னதாகச் சொல்லுகிறார்களே, அந்த ச்லோகங் கேட்டா கண்ணன் அவளுடைய ஆபத்தைத் தெரிந்து கொள்ள வேணும். ஆபத்ப்ராகபாவ ஸமயத்திலேயே காத்திருக்க வேண்டாமா? "*பகவத் ப்ரவ்ருத்தி விரோதியான ஸ்வப்ரவ்ருத்தி அவளுக்கிருந்தது; அதாவது தன் மானரக்ஷணார்த்தமாகத் தானே சேலையை இறுக்கியிறுக்கிக் கொண்டிருந்தாள்; 'இருகையும் விட்டேனோ த்ரௌபதியைப் போலே' என்னும்படியாக ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விளைந்ததைத் தானே ப்ரபத்தியென்கிறோம். பட்டர் அஷ்டச்லோகியில் "ஆத்மத்ராணோந்முகச் சேத் நம இதிச பதம்* என்று ஸாதித்திருந்ததிலுமன்றோ நான் விப்ரதிபத்தி கொண்டிருந்தேன். இது காறும் விவரித்த கஜேந்த்ர த்ரௌபதீ விஷயங்களை விமர்சிக்க விமர்சிக்கத் தெளிவு பெற்றேன்.

668. (சிஷ்) ஸ்வாமிந்! அபூர்வ விஷயம் கேட்டருளா. இதிஹாஸபுராணங்களெல்லாவற்றினுள்ளும் நமக்கு ஸ்ரீ ராமாயணம் ப்ரபலம். அதில் ஒரு சிறந்த கெட்டம் விஜ்ஞாபிக்கிறேன். ராம ராவண யுத்தம் வலிதாக நடந்துவருகையில் பெருமாள் இராவணனை நோக்கி *கச்சாநுஜாநாமி* என்று சொல்லி விடை கொடுத்த கதை ஸ்வாமிக்குத் தெரியுமே. *ஸ ராமபாணாபிஹதோ ப்ருசார்த்த: சசால* என்னும்படியான நிலைமையிலும் [அதாவது அரக்கன் அம்பு தொடுக்க மாட்டாமல் கலங்கி நின்றவளவிலும்] பெருமாள் அவனைப் புடைத்துக் கொண்டேயிருக்கிறார். 'இது தர்மயுத்தமன்றே, பெருமாள் எப்படி அதர்மயுத்தம் செய்கிறார்' என்று ஆலோசித்த இராவணன் தான் கையில் வில்லைப் பொகடாமல் கையிலேயே (வில்லை) வைத்துக் கொண்டிருந்தது ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியைக் காட்டாமையாலே இது நமக்கு ரக்ஷகமாகையன்றிக்கே விரோதியுமாகின்றதென்று தெரிந்துகொண்டு [சாபஞ்ச முமோச வீர:] வில்லையும் விட்டெறிந்தானிராவணன். உடனே பெருமாள் திருவுள்ளமிரங்கி [கச்சாநுஜாநாமி - இன்று போய் நாளை வா] என்று விட்டனர். கையில் வில்லைத்தாங்கி நிற்கையாலே ஸூசிதமான ஸ்வப்ரவ்ருத்தியானது பகவத் கருணாப்ரவ்ருத்திக்கு விரோதியாயிருந்தபடியை இங்கு அற்புதமாகக் காணலாமே. இந்தச் சுவடறியாமல் "உறக்கத்தில் ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி காண்கையாலே அது ப்ரபத்தியாக வேண்டிவரும்!" என்று சுஷ்க தூஷணமெழுத எப்படித்தான் ஸ்வாமிக்குக் கைவந்ததோ?

669. (தேசி.) நிதியான அர்த்தமன்றோ இது. முமுக்ஷுப்படியில் *ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய* என்ற விடத்தில் இந்த சுலோகம் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை நான் ஸேவித்திருந்ததுண்டு. எனக்கு அது புரியவில்லை. எதுவும் காதாரக் கேட்டால்தானே தெரியவரும். ஸத்யமாய் இன்று மஹா பாக்யம் பெற்றேன். இந்த கெட்டத்தில் காக சரணாகதியைப் பற்றியும் ஆழ்ந்து விமர்சிக்க வேண்டியதுண்டு; தத் பரஸ்தாத் பவிஷ்யதி.

(தொடரும்)

ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபா விளம்பரம்

1966 ஜனவரிமீ புதுப்பிக்கப்பட்ட ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபைக்கு வருடச் சந்தா ரூ. 25—00. செலுத்தி மெம்பர்களாய்ச் சேரவேண்டியது. அவர்களுக்கு ஸ்ரீராமாநுஜன் பத்ரிகை தனிச் சந்தா இல்லாமல் அனுப்பப்பட்டுவருவதுடன் இருபது ரூபா விலையுள்ள புத்தகங்களும் அளிக்கப்படும். அவர்கள் நம்முடைய புத்தக ஜாபிதாவைத் தருவித்துப் பார்த்து அதில் தங்களுக்கு விருப்பமான (20 ரூ. விலையுள்ள) நூல்களுக்கு ஆர்டர் செய்யலாம்.

இப்படிக்கு,
ஷை ஸபையின் பிரஸிடெண்டு P. B. A.

நமது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய நூல்கள் கிடைக்குமிடங்கள்:—

(1) க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்–3.

(2) V. N. Devanathan,
213. Govindappa Naicken St., G. T. Madras.

(3) M. A. KRISHNAMMAL, Advocate,
20, South Mada Street, Triplicane, Madras-5.

(4) A. RAMANUJACHARI, B. A.,
A 230 E. Type, Pandara Road, New Delhi.-11.

If un-delivered please return to:

**P. B. ANNANGARACHARYA.**
KANCHEEPURAM-3.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Satgrantha Prakasana Sabha.
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press.
Sannidhi Street. Kanchipuram-3.